புதினப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

உ

விரோதிஹூ (1889) ஆவணிமீ உ௪உ ஆரம்பமானது

பத்திராக்கிரயம்.

வருஷம் ஒன்றுக்கு:

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம் | ரூ 5-00 |
| இங்கிலீசும் தமிழும் | 9-00 |
| இலங்கை இந்தியா | ரூ 8-00 |
| இங்கிலீசும் தமிழும் | 12-00 |
| சொரிவாய்ப்பகுதி | ரூ 9-00 |
| இங்கிலீசும் தமிழும் | 13-00 |

முற்பண மனுப்பினு லன்றிக் கவனிக்கப்படா.

# இந்துசாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

விளம்பரவிகிதம்.

முதன்முறைக்கு:

| | | |
|---|---|---|
| ,, ஒருகலம் | ரூபா | 10-00 |
| ,, அரைக்கலம் | ,, | 5-50 |
| ,, கார்க்கலம் | ,, | 4-00 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி.

☞ விளம்பரங்கள் முற்பண மனுப்பினு லன்றிக் கவனிக்கப்படா.

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்".

"சீர்பூத்த கருவிகுணர்ச்சி தேங்கச் சிவம்பூத்த நிகமாக மக்கனோங்கப், பார்பூத்த புறச்சமய விருள்கணிக்கப் பரம்பூத்த சைவநெறி பாரோர் தாங்கப்,
பேர்பூத்த சிவானந்தத் தினிது துய்க்கப் பிறைபூத்த சடைமுடிப் பிரானார் தந்த, வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேழு மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்"

"வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல்லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

புத்தகம்—சரு } யாழ்ப்பாணம்:— ஸ்ரீமுகஹூ மாசிமீ அஉ; (1934 பிப்ரவரி 19) திங்கட்கிழமை. { இலக்கம்—அ௰

# அரவிந்தகோஷ் தமது பத்தினிக்கு எழுதிய அறிவுரை.

## பித்தனை மணந்ததாற் சுகமடைந்திலை.

## "நீ என்ன செய்யப் போகிறாய்"

## பேய்த்தனமான மூன்று எண்ணம்.

## தனக்கென்று வாழாதிருத்தல் வேண்டும்.

ஸ்ரீ. அரவிந்தகோஷ் தமது மனைவியாருக்கு எழுதிய கடித விபரம் வருமாறு:—

"அன்பிற்கினிய மிருணாலினி! ஆகஸ்டுமீ 2௨ நீ எழுதிய கடிதம் வந்து சேர்ந்தது. உனது தாய் தந்தையர்களுக்கு முன்போலவே மறுபடியும் துக்கம் நேர்ந்திருப்பதைப் பற்றி நான் வருத்தமடைகிறேன். எந்தப் பையன் பரலோக மடைந்தான் என்பது உனது கடிதத்தில் விளங்கவில்லை. துன்பம் வந்தாலென்ன? அதைப் பொருட்படுத்தலாகாது. உலக இன்பத்தைத் தேடப்போனால் அவ்வின்பத்தினிடையே துன்பம் எப்போதும் தோன்றும் இன்பத்தைத் துன்பம் எப்போதும் எட்டி நிற்கின்றது. இந்த விதி புத்திர பாசத்தில் மட்டுமன்று. உலக இச்சைகளின் எல்லாவற்றிலும் பொருத்தமானதாகும். சுக துக்கங்கள் எல்லாவற்றையும் அமைதியுடன் ஈசனது திருவடிகளிலே அர்ப்பணம் செய்து விடுவதாகிய ஒரு வழிதான் மனிதனுக்குண்டு............

இப்போது உன்னிடத்தில் ஒரு முக்கியமான சங்கதி தெரிவிக்கப் போகிறேன். அதாவது எந்த மனிதனுடைய விதியோடு உன்விதி இணைக்கப்பட்டிருக்கிறதோ அவன் (அரவிந்தர் தம்மையே குறிப்பிடுகிறார்) ஒரு விநோதமான மனிதன் என்பது இதற்கு முன்பாகவே உன் மனத்திற்குத் தெரிந்திருக்கும். தற்காலத்தில் இத்தேசத்தார் கொண்டிருக்கும் மனநிலை, காரியார்த்தங்கள், தொழில்வகைகள் நான் கொண்டிருக்கும் மனநிலை முதலியவைகளுக்கு மாறுபட்டவையாகும். அவை எல்லாவிதத்திலும் மாறுபட்டவை; அசாதாரணமானவை.

### எனது பைத்தியம்.

நூதனமான அபிப்பிராயங்களையும், ஆசைகளையும் பற்றிச் சாமானிய மனிதர்கள் என்ன சொல்வார்களென்பது உனக்குத் தெரிந்திருக்கலாம். அவ்விதமான மன இயக்கங்களையும், "பைத்தியம்" என்கிறார்கள். அப்படிப்பட்ட பித்தன் எடுத்த காரியம் நிறைவேறிவிட்ட பிறகு அவனை மகானென்றும், வர புருஷனென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் இது போன்ற முயற்சிகளிலே எத்தனைபேர் சித்தி பெற்றார்கள்? ஆயிரத்திலே பத்துப்பேர்தான் விசேஷமாயிருக்கிறார்கள். இந்தப் பத்திலே கூட ஒருவன்தான் சித்திபெறுகிறான். நானோ எனது முயற்சியிலே சித்திபெறாமலிருப்பது மட்டுமேயன்றி இன்னும் அதிலே முழுதும் பிரவேசங்கூடச் செய்ய முடியாத நிலைமையிலிருக்கிறேன். எனவே என்னைப் பித்தனென்றுதான் சொல்லுவார்கள். பித்தனை மணஞ்செய்திருப்பது ஒரு பெண்ணுக்குக் கஷ்டம் தரக்கூடியதாகும். ஸ்திரிகளுடைய ஆசைகளெல்லாம் உலக சுக, துக்கங்களைப் பொறுத்தவையாயிருக்கின்றன. பித்தனால் தனது மனைவிக்குச் சுகங்கள் ஏற்படமாட்டா. துன்பங்கள் ஏற்படுதல் கூடும்.

இந்துமத ஸ்தாபகர்களான ரிஷிகள் இதை நன்றாகத் தெரிந்திருக்கிறார்கள் ஆகவே அந்த ரிஷிகள் விசேஷமான மனிதர்களை (அவர்களைப் பித்தர்களென்று வைத்துக்கொண்டாலும் சரியே, அல்லது மகான்களென்று வைத்துக்கொண்டாலும் சரியே) மிகவும் கௌரவப்படுத்தினார்கள்.

### மாதர் கடமை.

ஆனால் இம்மனிதர்களால் அவர்களுடைய பத்தினிகளுக்கு ஏற்படும் பெரிய துயரங்களுக்கு என்ன நிவிர்த்தி என்றால், அதற்கும் நமது புராதன ரிஷிகள் வழி சொல்லியிருக்கிறார்கள். "ஸ்திரீகளுக்குப் புருஷனே குரு" என்ற விதியே அவர்களுக்குப் பரம விதி என்பதை நீ இப்பொழுதுதான் நன்றாக அறியவேண்டும். பத்தினியே கணவனுக்குத் தர்மத் துணையாவாள். அவன் எதைத் தர்மம் (மதம்) ஆக்கொள்ளுகிறானோ அதில் ஸ்திரி உதவி செய்யவும், யுக்திசொல்லவும், உற்சாகப் படுத்தவும் வேண்டும். அவள் அவனையே தெய்வமாகக்கொண்டு அவன் மகிழ்ச்சியிலே தானும் மகிழ்ந்து, அவனது துயரத்திலே தானும் துயரப்படுதல் வேண்டும். தனது தர்மம் இது என்பதைத் தெரிந்தெடுத்துக் கொள்வது புருஷனுடைய கடமை, அதில் அவனுக்குத் துணைபுரிந்து உற்சாகப்படுத்துவது பெண்ணின் கடமை என்று ரிஷிகள் நமது நாட்டுப் பெண்களுக்குப் போதனை செய்திருக்கிறார்கள்.

நான் சொல்வதை நன்றாக அவதானி! ஹிந்து மார்க்கத்தினுடைய முறையை நீ அனுசரிக்க விரும்புகிறாயா? அல்லது நவீன நாகரீக முறையை அனுஷ்டிக்கப் போகிறாய? நீ ஒரு பித்தனை விவாகம் செய்துவிட்டாய். அது உன்னுடைய பூர்வஜன்ம கர்மங்களின் பலன். விதிவழியை அறிந்துகொள்வது நன்று. நீ எங்ஙனம் அறிந்தொழுகப் போகிறாய்? மற்றவர்களைப்போல நீயும் அவனைப் பித்துக்கொண்டவனென்று தள்ளிவிடுவாயா? பித்தன் தனது பைத்திய வழியில் ஓடவே செய்வான். அவனை உன்னால் தடுக்க முடியாது. அவனது இயற்கை உன்னுடைய இயற்கைக்கு மெலிந்ததாகுமா? (அபலையாகிய நீ அவனை எங்ஙனம் தடுக்க முடியும்) எனவே, நீ மூலையில் உட்கார்ந்து வருத்தப்படப் போகிறாயா? அல்லது பித்தனுக்குத் தகுந்த பித்தியாக நீயும் அவனுடன் ஓடிவருவாயா? குருடனாகிய திருதராஷ்ட்ர ராஜன் மனைவி அவனுக்கு உள்ளது தனக்குமென்று தன் விழிகளையும் துணியாற் கட்டிக்கொண்டு வாழவில்லையா? ஆயிரம் பிரமசமஜப் பாடசாலைகளிற் படித்தபோதிலும் நீ ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணாதலின் உனது சரீரத்தில் ஹிந்து மூதாதைகளின் ரத்தமே ஓடுகின்றது. ஆதலால் இவ்விஷயத்தில் நமது ஹிந்து மார்க்க முறையையே அனுசரிப்பாயென்று நான் உறுதியாக நம்புகிறேன்.

### முதற் பைத்தியம்.

எனக்கு பைத்தியமான மூன்று எண்ணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முதலாவது:—ஒருவனுக்கு அறிவு, பயிற்சி, கல்வி, செல்வம் முதலிய எவ்வித நன்மைகளையும் தனது குடும்ப ரக்ஷணைக்கு அத்தியாவசியமாக எம்மட்டுச் செலவிட வேண்டுமோ, அம்மட்டுத்தான் செலவிட அவனுக்கு அதிகாரம் உண்டென்பது எனது உறுதியான நம்பிக்கை. ஈசன் கொடுத்த நன்மைகள் முழுவதையும் தன் பொருட்டே செலவிட்டு விடலாகாது. எஞ்சியிருப்பதைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். ஈசனுடைய கைங்கரியத்திலே செலவிடவேண்டும். எனக்கு உள்ளவற்றையெல்லாம் நான் என்பொருட்டாகவே எனது சுகங்களிலும் போகங்களிலும் செலவிட்டு விடுவேனானால், நான திருடனாவேன். ஈசனிடமிருந்து செல்வம் கிடைக்க, பெற்றுக் கொண்டு அவர் கைங்கரியத்திலே விநியோகம்செய்யாதவன் திருடனென்று ஹிந்து சாத்திரங்கள் கூறுகின்றன. இதுவரை நான் சம்சாரசுகத்திலே மூழ்கிக் கிடந்து விட்டேன். ஒரு ரூபாயில் இரண்டணா ஈசனுக்கும், பதினான்கணா எனக்குமாகச் செலவிட்டுக் கொண்டுவந்தேன். எனது ஆயுளிற் பாதி செலவாகி விட்டது. அது விருதாவாகவே போயிற்று.

மிருகங்கூடத் தனது சொந்த வயிற்றையும் தனது குடும்பத்தாரின் வயிற்றையும் நிரப்பிவிட்டுத் தான் கடமையைச் செய்ததாக நினைத்துக் கொள்ளுகிறது. இதுவரை நான் திருடனுடைய நடையையும் மிருகங்களின் நடையையும் பின்பற்றி ஒழுகி வந்தேன். இப்பொழுது இதனை அறிந்து கொண்டேன். இதனால் எனக்கு வருத்தமும், என்னிடத்து வெறுப்பும் உண்டாயிருக்கின்றன. இனி அதனை வேண்டேன். அப் பாவவாழ்க்கையை அறவே தொலைத்து விட்டேன்.

நாம் கடவுளுக்குக் கொடுப்பதென்றால் எப்படி? தர்மச் செயல்களிலே நமது பொருளைச் செலவிடுதலே அதற்கு வழியாகும். எனது சகோதரி சரோஜினிக்கேனும் அல்லது உனக்கேனும் நான் பணம் கொடுப்பதைப் பற்றி நமக்குள் வருத்தமுண்டாகவில்லையல்லவா? மற்றவர்களுக்கு நன்மைசெய்வது தர்மம். தன்னைச் சார்ந்தோர்களை ஆதரிப்பதுதெய்வ பக்தியில் ஓர்பகுதியாகும். ஆனால் ஒருவன் தனது கூடப்பிறந்த சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் கொடுப்பதினாலே மட்டும் அவனுடைய தர்மம் நிறைவேறிவிடமாட்டாது. இந்தப் பஞ்ச காலத்தில் நாடுமுழுதுமே என் வீட்டு வாசலில் ஆதரவுக்குவந்துகாத்துநிற்பதுபோலிருக்கிறது. இந்த நாட்டிலே எனது உடன் பிறந்தோர் முப்பது கோடிபேர் இருக்கின்றார்கள். அவர்களிலே பலர் பட்டினியாற் சாகின்றார்கள். நோயினாலும் துயரத்தினாலும். மிகுந்த ஈன நிலைக்கு வந்து, அவர்கள் எப்படியோ உயிர் வாழ்கின்றனர். அவர்களுக்குத் துணைபுரிவது என் கடமை. நீ என்ன சொல்லுகிறாய்?

இவ்விஷயத்திலே உன்சம்மதி அளிப்பாயா? வெகு சாதாரண மனிதனைப் போல் ஜீவித்துக்கொண்டு, கேவலம் உடலிலே உயிர் தரிப்பதற்கு அவசியமான விஷயங்களில் மட்டும் செலவிட்டுக்கொண்டெஞ்சியதை எல்லாம் நான் தெய்வ கைங்கரியத்திற்கு விநியோகஞ் செய்யப் போகிறேன்; இது என் விருப்பம்; நீயும் இதற்குச் சம்மதித்து ஆத்ம யக்ஞம் செய்ய இணங்குவாயானால் எனது விருப்பம் நிறைவேறுதல் எளிதாகும் உனக்கு வாழ்க்கையிலே க்ஷேம முண்டாகவில்லை என்று அடிக்கடி முறையிட்டிருக்கிறாய். உன் க்ஷேமத்திற்குரிய வழி ஒன்றை இப்பொழுது உனக்குக் காட்டியிருக்கிறேன். நீ அந்த வழியைக் கடைப்பிடித்து ஒழுகுவாயா?

### இரண்டாவது பைத்தியம்.

எனது இரண்டாவது பைத்திய எண்ணம் இப்போதுசிலகாலமாக ஏற்பட்டிருக்கிறது. நேருக்குநேராகப் பரமாத்மாவைக் காணவேண்டுமென்பதே அவ்வெண்ணமாகும். தற்காலத்திற் சனங்கள் எடுத்ததற்கெல்லாம் ஈசன் பெயரைச் சொல்வதும், எல்லோர்கண்முன்புநின்றுதொழுதுதமது பக்தியை உலகத்தாருக்கே காட்டுவதும் தர்ம (மத) மாகப் பாராட்டுகிறார்கள். பரமாத்மா ஒன்று இருப்பது மெய்யானால் அதன் உண்மையை நாமே உணர்ந்து அதை நேருக்கு நேராகக் காண்பதற்கு ஏதேனும் ஒரு வழி இருந்தே தீரவேண்டும். அந்த வழி எத்தனை அபாயமாயிருந்தபோதிலும் அதில் நடந்தே தீரவேண்டுமென்று என் மனசில் அசைக்க முடியாத நிச்சயம் செய்து கொண்டிருக்கிறேன். அவ்வழி நமக்குள்ளேயேயிருக்கிறதென்று இந்து சாஸ்திரத்திலே அவ்வழியிற் செல்லும்பொருட்டுச் சில விதிகள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. நான் இவ்விதிகளை ஆரம்பிக்கத்தொடங்கியிருக்கிறேன். ஒருமாத காலத்திற்குள்ளாகவே இந்து சாஸ்திரத்தின் போதனைகள் பொய்யல்ல என்பது எனக்குத் தெளிவாகி விட்டது. அந்தச் சாஸ்திரத்திலே சொல்லியுள்ள சில அடையாளங்கள் எனக்குச் சித்தித்துக் கொண்டு வருகின்றன. இந்த வழியிலே உன்னையும் அழைத்துச்செல்லவேண்டுமென்பதுஎன்கருத்து; என்னுடன் சமவேகமாக வருதல் உனக்கு முடியாமலிருக்கலாம். ஏனெனில், அதற்கு வேண்டிய அளவு ஞானம் உன்னிடம் இல்லை. ஆனால் நீ என்னைப் பின்தொடர்ந்து வருதல் கஷ்டமன்று. இம்மார்க்கத்தை அநுசரிப்பவருக் கெல்லாம் சித்தி ஏற்படக் கூடும். ஆனால் அது நமக்குள்ள தாகத்தைப் பொறுத்து நிற்கிறது. உன்னை இவ்வழியிலே பலவந்தமாய் அழைத்துச் செல்லுதல் யாருக்கும் சாத்தியமன்று. நீ இதற்கு இணங்குவாயானால் இதைப்பற்றிப் பின்னிட்டுஉனக்கு விஸ்தாரமாய் எழுதுகிறேன்.

### மூன்றாவது பைத்தியம்.

என்னைப் பிடித்திருக்கும் மூன்றாவது பைத்தியம் பின்வருமாறு:

சாமான்யமாகப் பலர் இந்நாட்டை வெறும் மைதானங்களும், வயல்களும், காடுகளும், குன்றுகளும், நதிகளுமுடையதோர் உயிரற்றபொருளாகக்கருதுகிறார்கள் நான் இதனைத்தாயாக அறிந்திருக்கிறேன். தாயாகவே இவளை மதித்துத் தொழுகிறேன். தாயின் மார்பிலே ஓர் அரக்கன் வந்து உட்கார்ந்து கொண்டு அவளது இரத்தத்தை உறிஞ்சுவானுயின் அப்பொழுது மகன் என்ன செய்வான்? கவலையேதுமின்றித் தான்சோற்றின்முன் இருந்து கொண்டு தனது மனைவி மக்களுடன் மகிழ்ச்சியிலே சோத்தைக் கழிப்பானா? தனது தாயை ரக்ஷிக்க வழி தேடுவானல்லவா? வீழ்ச்சியடைந்து போயிருக்கும் இந்நாட்டைக் காப்பாற்றும் வல்லமை எனக்கு உண்டோ என்பதை நான் அறிந்திருக்கிறேன். எனக்குச் சரீரபல மில்லாதிருக்கலாம். ஆனால் நான் வாளேனும் துப்பாக்கியேனும் கொண்டு போர் செய்யப் போவதில்லை. புத்தி பலத்தால் யுத்தம் நடத்தப் போகிறேன். ராணுவபலம், சரீரபலம் இவற்றைத்தவிர வேறு சக்தியில்லையென்று நினையாதே. ஞானத்தை ஆதாரமாகக் கொண்டு நிற்கும் ஆத்மபலம் என்பதோர் சக்தி இருக்கின்றது. இந்த எண்ணம் எனக்குப் புதிதாய் இன்று நேற்று விளைந்ததன்று. நான் பிறக்கும்பொழுதே இதுவும் உடன் பிறந்திருக்கிறது. இது என் இயற்கையிலேயே ஊறிப்போய் என் உள்ளத்தில் ஆழமாக வேரூன்றி இருக்கிறது. இந்த உன்னதமான கர்மத்தை நிறைவேற்றும் பொருட்டாகவே என்னை

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: ஸ்ரீமுகஹு மாசிமீ அ௳ திங்கட்கிழமை.


## ஸ்ரீ அரவிந்தத் துறவி.

பாரதநாட்டின் அரும்பெறற் புத்திரராகிய ஸ்ரீமத் அரவிந்தகோஷ் மகானைப்பற்றி உலகத்தில் அறியாதார் சிலரினுஞ் சிலரேயாவர். இவர் வங்காள நாட்டில் விவேகிகளையும் மகான்களையும் பரம்பரையாகக் கொண்டதாகிய "கோஷ்" வமிசத்திற் பிறந்து இங்கிலாந்தில் உயர்தரக் கல்விபயின்று "ஸிவில் ஸர்விஸ்" எனப்படும் மேலான பரீட்சையில் திறமையுடன் சித்தியடைந்து அந்தப் பரீட்சையில் ஒரு அம்சமாயுள்ள குதிரையேற்றத்திற் சித்தியடையாமையினால், உத்தியோகம் பெறாராய், அதன்பின்னர் சுயமன்னராற் பரிபாலிக்கப்படும் பரோடாநாட்டில் மகாராஜா கல்லூரித் தலைமையாசிரியராகச் சிலகாலம் கடமைபார்த்து வந்தனர். இப்பெரியார் அவதரித்தமை தாய்நாட்டின் ஈடேற்றத்தின்பொருட்டுச் செயற்கரும் பெருஞ் செயல்களைச் செய்வதற்கென்ற நியதியிருந்தமையினாற்போலும், கல்லூரி ஆசிரியராகத் தாம் கடமைபார்ப்பதைவிடுத்து, தம் ஜன்ம நாட்டின் தொண்டாற்ற நினைத்து வங்காளத்திற்கு மீண்டு வந்தனர். அக்காலத்தில் இந்திய அரசினருக்கும் சனங்களுக்குமிடையே பெரும் மனஸ்தாபங்களும் துவேஷமும் ஏற்பட்டிருந்தன. நமது அரவிந்தரையும் அவருடைய சகோதரரையும் இன்னுஞ் சிலரையும் இந்திய அரசினர் ராசத்துரோகிகளாக மதித்து அவர்கட்கு மாறாகக் கருமஞ் செய்யத் தலைப்பட்டனர். அதனால் அரவிந்தப் பெரியார் பிருத்தானிய இந்தியாவிலிருப்பதைக் காட்டிலும் பிரான்சிய பரிபாலனத்திலுள்ள புதுச்சேரியிற் சென்று வசிக்கலாயினர். இது நிகழ்ந்து 30 வருடங்கள்வரையிலிருக்கும். மிருகபலத்தினாற் பகைவரை வெல்வதும் சுயாதீனம் பெறுவதும் அசாத்தியமென்பதையும் ஆத்மசக்தியே இவ்விஷயத்தில் நிச்சயமான வெற்றியைத் தருமென்பதையும் திடமாக உணர்ந்து இம்மகான் துறவுபூண்டு பாரதமாதாவின் ஈடேற்றத்தின் பொருட்டு அரசியல் யோகியாகச் சாதனைகள் செய்துவரலாயினர். சென்ற 30 வருட காலமாக இவர் செய்யும் தியானம் யோகம் ஜெபம் தபம் விரதம் எல்லாம் தமது தாய்நாட்டின் ஈடேற்றத்தை உத்தேசித்தேயானவையாகும். பாரதநாட்டுத் தலைவர்களுள் இவரிடஞ்சென்று இவரைத் தரிசித்து உபதேசம் பெறாதவர் இல்லையெனலாம். மகாத்மாகாந்தி, பண்டித மதன்மோகன் மாளவியா, தேசபந்துதாஸ், மோதிலால் நேரு முதலாம் தலைவர்கள் இந்த யோகியிடஞ்சென்று, தங்களுடன் சேர்ந்து தாய்நாட்டின் ஈடேற்றத்தின்பொருட்டு உழைக்க வரவேண்டுமெனக் கேட்டபோது, அப்பொழுது பக்குவகாலமல்லவென மறுத்துவிட்டார்.

இப்பெரியார் இப்பொழுது தாம் கொண்ட நோக்கங்கள், செய்யவிருக்கும் முயற்சிகள், அவ்விஷயத்தில் தமது பத்தினி தமக்கு ஆற்றவேண்டிய துணை நடந்துகொள்ள வேண்டிய முறை, தமது மனநிலை முதலிய இவைகளையெல்லாம் தொகுத்துத் தமது பத்தினியாருக்கு ஒரு பரந்த சிறந்த கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதம் இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. அபிமானிகள் எவரும் அதனை ஒருமுறையல்ல இருமுறை மும்முறை படித்துச் சிந்திப்பார்களென எண்ணுகின்றோம். அக்கடிதத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட வாக்கியங்களைச் சிந்திக்குந்தோறும் இப்பெரியார், உலகம் முழுவதும் தடுமாறினும் சந்திர சூரியர் திசைமாறினும் தாம் மாத்திரம் நிலைமாறாத் திடசித்தம் பூண்டுள்ளவரென்பது நன்கு புலப்படுகின்றதல்லவா. தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெருந்தகை இம்மகான்என்பதற்கு ஏதுஞ் சந்தேகமுண்டா? இப்படியான இன்னுமொரு அரியபுத்திரனை இக்கலியுகத்தில்எக்காலத்தாயினும் பாரதமாதா பெற்றுள்ளாளோ வென்பது சந்தேகம். கடிதத்தில் ஓரிடத்தில் என்ன சொல்லுகிறார். "தாயின் மார்பிலே ஓர் அரக்கன் வந்து உட்கார்ந்துகொண்டு அவளது இரத்தத்தை உறிஞ்சுவானாயின் அப்பொழுது மகன் என்ன செய்வான்" இந்தவிதமான எண்ணம் ஆர்திரம் அபிமானம் பாரதநாட்டுத்தலைவர் வேறு எவர்க்கேனும் உண்டோ என்பது ஆசங்கைக்கு இடமாம். உண்மையாக ஒருவன் தன் தாய்நாட்டின் பரிதாப நிலைமையை இந்த விதமாக நினைப்பானாயில் அவனுக்கு ஆறுதல்வருமா? பசிவருமா? நித்திரைவருமா? உலக விவகாரங்களிற் சிந்தனைசெல்லுமா? எல்லாம்வல்ல இறைவனை நோக்கித் தவங்கிடந்து அரக்கரைத் தொலைத்துத் தாய்நாட்டை விடுதலை செய்யவேண்டுமென்ற திடசித்தமும் ஊக்கமும் வருமேயல்லாமல் வேறு எவைதான் அவன் மனசில் வருதல் முடியும்? எவையும் வரமாட்டா! இப்படிப்பட்டவர்களுக்கு அச்சமில்லை; இவர்களே உயிரைத் திரணமாக மதிப்பவர்கள். இவர்கள் ஒருகாலத்தாயினும் நிலைதிறம்பார்கள்.

இவ்வாறாக இப்பெரியார் கொண்டுள்ள நோக்கங்களெல்லாம் மேலானவைகளாக, தமது மனைவியாருக்கு எழுதிய கடிதத்தை நோக்குமிடத்து இவர் தாய்நாட்டின் ஈடேற்றத்திற்கு இப்பொழுது முற்பட்டு உழைப்பதற்காகத் துணிந்துகொண்டன ரென்பது தெள்ளிதிற் புலப்படக்கிடக்கின்றது. மனையாட்கு இவர் தம் கடிதமூலமாகத் தெருட்டிய அறிவுரைகளெல்லாம் எவரும்—விசேஷமாகப் பெண்பாலாரெல்லாரும் பின்பற்றிப் போற்றி ஒழுகத்தக்கன. அக்கடிதத்தில் "மாதர் கடமை" என்ற பிரிவிற் சொல்லப்பட்டவை யனைத்தையும் ஒவ்வொரு உத்தமியும் பொன்போற் பேணவேண்டுமல்லவா? அந்தப் பிரிவை உற்று நோக்குமிடத்தில், ஒரு இரகசியம் வெளிப்படுகின்றது. நமது அரவிந்தர் இந்த மார்க்கத்தை அநுசரிக்க அவர் மனைவியார் பிரமசமாஜம் என்னும் நவீனக்கொள்கையைப் பூண்டு ஒழுகுகின்றாரென்பது விளங்கக்கிடக்கின்றது. கணவன் ஒரு மார்க்கமும் மனைவி வேறொரு மார்க்கமும் பூண்டொழுகுவது மகரிஷிகளின் கொள்கைக்கு மாறானதென்பதையும் கணவனே தெய்வம், கணவனே குரு, ஆதலால் அந்த விஷயத்திற் பேதமான கொள்கைகள் இருக்கவொண்ணாதென்பதையும் இன்னபிறவற்றையும் அரவிந்தர் பெரிதும் எடுத்துப் பிரதிபாதித்துள்ளார். இவைகளெல்லாவற்றிலும் மேலான குணமாக நாம் இம்மகானிடத்திற் காணத்தக்கது நிலையிற் பிரியாமையாகும். பாரத நாட்டிலும் இந்த இலங்கையிலும் சனத்தலைவர்களெனவிருப்போருட் சிலர் காலத்திற்குத் தக்க கோலமாகத் தம் கொள்கையை மாற்றி நிலையிற் பிரிந்து தம்மையும் தம்மைப் பின்பற்றித் தேசத்தொண்டு செய்தோரையும் கெடுத்துவிடுகிறார்கள். ஆனால் நமது அரவிந்த மகானிடத்தில் இந்த நிலைமாறுதலாகிய இயல்பு எள்ளளவும் இல்லையென்பதற்கு ஏதுஞ் சந்தேகமுண்டா? இல்லை, ஒருபோதுமில்லை. இப்படிப்பட்டவரே சூரர் எனப் பாராட்டப்படுவர். ஸ்ரீமத் அரவிந்தகோஷ்போன்ற ஒரு உத்தம புத்திரரை இந்த இலங்காதேவியானவள் எக்காலத்தாயினும் பெறுவாளா?

## மருமகனை வருத்திய மாமன்

*மட்டக்களப்பைச் சேர்ந்த ஆரப்பத்தை என்னும் கிராமத்தில் வசிக்கும் எம். மூத்ததம்பி என்பவர் 6 வயதுள்ள தனது மருமகனாகிய தங்கராசா என்னும் பையனைக் காட்டிற்குச் சென்ற வியாழக்கிழமை பின்னேரம் அழைத்துச்சென்று, அவனுடைய கழுத்துச்சங்கிலியையும், அரைஞாண்கொடியையும், காப்புகளையும் கழற்றியபின் கண்டபடி அடித்துப் பையனை மூர்ச்சிக்கும்படி செய்தாராம். மூர்ச்சையாகிப் பையன் கிடப்பதைக் கண்ட மூத்ததம்பி, அவன் இறந்துவிட்டான் என எண்ணிச் சந்தோஷமாக வீடுசேர்ந்தாராம்.*

*சிலநேரத்தின்பின் பையன் மூர்ச்சை தெளிந்தெழுந்து, மெல்ல மெல்லவாய்த் தன் வீட்டிற்குச் சென்று நடந்தசம்பவத்தைத் தன் பெற்றோருக்குச் சொன்னான். அவர்கள் உடனே பொலிசாருக்கு அறிவிக்க மூத்ததம்பி சிறைப்பட்டார். பையன் இப்போது அபாயகரமான நிலையில் மட்டக்களப்பு அரசினர் ஆஸ்பத்திரியில் இருக்கிறான் அவன் மூக்கிலும் வாயிலுமிருந்து இரத்தம் பெருகின்றதாம்.*

*மூத்ததம்பி இப்போது விளக்கமறியலில் இருக்கிறார்.*

## இலங்கையிற் சீனி உற்பத்தி.

—:o:—

### 70000 டன் சீனி இறக்குமதி.

### அமெரிக்க நிபுணரின் விளக்கம்.

*அமெரிக்க ஐக்கிய மாகாணங்களுக்கு வியாபாரப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள மிஸ்டர் W. A. பீர் (Beer) என்பவர் தமது அறிக்கையில் சீனி உற்பத்தியைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்:-*

*இலங்கைக்கு அவசியத் தேவையான பொருள்களுட் சீனியுமொன்று. வருடமொன்றுக்கு 70,000 டன் நிறையுள்ள சீனி இறக்குமதியாகின்றது. ஹவியன் தீவுகளில் நான் சிலகாலமாக வசித்து வந்ததன் பேறாக ஆங்கு சீனி எவ்வாறு உற்பத்தியாக்கப் படுகிறதென்பது எமக்குத் தெரியும். சீனியுற்பத்தி இலங்கையில் பன்முறை பரீட்சிக்கப்பட்டது. ஆனால் ஒவ்வொரு முறையும் பிரதிகூலமே பெறுபேறாக விருந்தது. போதிய முதலும் அனுபவமின்மையுமே யிதற்குக் காரணமாகும். இலங்கையில் கரும்பு நன்றாக விருத்தியாக்கப்படக் கூடுமென்பதும், சீனியுற்பத்தி இலங்கையின் விசேஷித்த தொழிலாக்கப்படக் கூடுமென்பதும் மறுக்கொணா வுண்மைகளாகும். ஜப்பானுக்கும் ஹொங்கொங்கு என்றவிடத்துக்கு மிடையில் நான் கடற்பிரயாணம் செய்ய நேர்ந்தபோது கப்பலில் ஹவாய் பிலிப்பைன் தீவுகளிலுள்ள சீனியுற்பத்திச் சாலைகளோடு சம்பந்தமுடைய ஒரு பிரபுவைக் கண்டு சம்பாஷிக்க நேர்ந்தது. இவர் மனிலாவிலுள்ள சீனிப் பரிசோதனைச் சாலைக்கு அதிகாரியாக இருந்தவர். ஹவாய் தீவுகளிலும் பிலிப்பைன் தீவுகளிலும் கையாளப்படும் நவீன முறைகளை நான் இவரிடமிருந்து அறிந்துகொண்டேன். இலங்கையிற் சீனியுற்பத்தி சாத்தியமான காரணமென்று கூறினார். ஹவாய் தீவுகளில் சீனியுற்பத்தி பெரிய கம்பனிகளால் நடாத்தப்படுவது. பிலிப்பைன் தீவுகளில் அவ்விதமல்ல அங்கு கமக்காரர் கரும்புகளை வளர்த்து ஆலைக்காரரிடம் கொடுப்பார்கள். இலங்கையிலும் கமக்காரர் கரும்புச்சாகுபடி செய்தல் வேண்டும். சீனியுற்பத்தி நான்கு திறப்படும்: (1) கரும்புப் பயிர்ச்செய்கை; (2) கருப்பஞ்சாறு எடுத்தல்; (3) சீனியாக்கல்; (4) சீனியை வெவ்வேறிடங்களுக் கனுப்புதல்; கரும்பைப் பயிரிடுதல் கமக்காரரிடம் விடப்படுதல் வேண்டும். கரும்பைப் பிழிந்து சாறுக்கும் சாலை இலங்கையில் ஐந்தாறு ஸ்தலங்களில் நிறுவவேண்டும். சீனியாக்கும் நிலையம் கொழும்பில் ஸ்தாபிக்கப்படவேண்டும் சீனியுற்பத்திக்கு வேண்டப்படும் மூலதனம் 8 000000 ரூபாவாகும் இலங்கையில் 40,000 ஏக்கர் நிலம் கருப்பஞ் செய்கைக்கு ஏற்றதாகும். ஹவாயிலுள்ள நிபுணரோடும் கலந்து பேசினேன். தமது கலாசாலையில் இரு இலங்கை மாணவர் சேர்ந்து சீனித்தொழிலைப்பற்றி ஆராய்ச்சி செய்து கற்றுத் தேறுவதற்குத் தாம் இடங்கொடுப்பதாக உறுதிமொழி கூறினார். இந்த ஆராய்ச்சிச் சாலைக்குச் சென்று கற்கவிரும்பும் இலங்கை வாலிபர்களுக்கு இலங்கைச் சீனிக் கம்பனிகாரர் உபகாரச் சம்பளம் கொடுக்க முற்படவேண்டும். அங்கு மாணவர் போதனா முறை சாதனா முறை இரண்டிலும் பயிற்றப்படுகிறார்கள். நான் கொழும்புக்கு வந்தபோது சிலரோடு இதுவிஷயமாய்ப் பேசினேன். இம்முயற்சியிலதிக ஊக்கம் காணப்படுகிறது. போதிய அனுபவமும் ஞானமுமுடைய திறமையாளராலும் இம்முயற்சி நடாத்தப்படின் மூலதனம் உதவப் பலர் முன்வருகின்றனர். தங்கள் காணிகளைக் கருப்பஞ் செய்கைக்குக் கொடுக்கப் பலர் தயாரித்திருக்கின்றனர். அநேகர் கம்பனியிற் பங்குபற்றவும் முன்வருகின்றனர். இந்தப் புதிய, மிக அவசியமான முயற்சியிற் பங்குபற்றவாவது, ஈடுபடவாவது, விருப்பமுள்ள வனையோருடைய அபிப்பிராயங்களையும் அறிய நான் ஆவலாயிருக்கிறேன்.*

## காணி விற்பனவு.

*யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டில் 4565 ம இலக்கவழக்கில் 1934 ஹு 8 ம தேதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி விற்கப்படவேண்டிய காணி கம்மிஷனர் V செல்லத்துரை அவர்களால் 1934 ஹு மாசியாதம் 24-ம தேதி சனிக்கிழமை அக்கத்தக் காணிக்குள் நின்று விற்கப்படும் 18-1-34 வெளிவந்த விளம்பரத்தில் 27 ம தேதி சனிக்கிழமை என வந்ததை மேற் கூறியவாறு திருத்திக் கொள்க.*

## பெண் சோரவழக்கு.

### சங்கானை இரத்தினம்மாவின் கதி.

### குருக்கள் வீட்டிலும் பூசாரி வீட்டிலும் தங்கல்.

*சங்கானை மேற்கைச் சேர்ந்த வடலியடைப்பு என்னும் கிராமத்திலுள்ள பி. கல்லதம்பி, நாகமுத்து, எஸ். சுப்பிரமணியம், எம். சின்னத்தம்பி, கே. செல்லத்துரை, பொன்னம்பலம், என். கனகசபை, கே. பொன்னையா, கே. நவரத்தினம், சின்னான், சின்னத்துரை, அம்மா, நாகர், நாகலிங்கம என்னும் 14 பேர், அவ்வூர் வைத்தியலிங்கம் மகள் இரத்தினம் என்னும் பெண்ணைப் பலாத்காரமாகக் கடத்திச் சென்று கற்பழித்தார்கள் என்று சென்றவாரம் யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றஞ் சாட்டப்பட்டனர்.*

### இரத்தினத்தின் சாட்சியம்.

*"சென்ற டிசெம்பர்மாதம் 30ந்தேதி காலை 10 மணியளவில் 1ம் எதிரியின் சகோதரியும் 2ம் எதிரியுமாகிய நாகமுத்து என்பவன் எனது பெரியதாயாகிய தெய்வயானை என்பவரது வீட்டிற் குடிப்பதற்குத் தண்ணீர் கொடுக்கும்படி கேட்டான். ஒரேவளவில் எனது வீடும் எனது பெரியதாய் வீடும் உளது. தண்ணீரை நான கொடுத்தேன்.*

*"உடனே நாகமுத்து, "பூஞ்சி இஞ்சேபடா" என்று சொன்னான். உடனே கல்லதம்பி, சுப்பிரமணியம், சின்னத்தம்பி, பொன்னம்பலம் முதலியோர் வந்தார்கள். கல்லதம்பி என்னைப் பலாத்தமாகத் தூக்கினார். நாகமுத்துவும் அவனுக்கு உதவிசெய்தான். மற்றவர்கள் அப்போது ஒன்றும் செய்யவில்லை. மோட்டாரதத்தில் என்னைத் தூக்கிப்போடும்போது, எனது பெரியதாயாகிய தெய்வயானை என்னைப் பிடிக்க சுப்பிரமணியம் பொல்லினால் அவரை அடித்தான். பின்னர் ஐயாத்துரை என்பவரும் உதவிக்கு வர அவரைச் செல்லத்துரை அடித்துக்கீழே தள்ளினான். பின்னர் என்னை ரதத்தில் ஏற்றிக்கொண்டு 100யார் தூரம் வரை போனதும், மோட்டார்வண்டி தற்செயலாகப் பழுதானது. அப்போது எனது சிறியதகப்பனார் அங்கு ஓடிவந்தனர். வந்ததும் நான் என்னைப் பாதுகாத்துக்கொள்ளும்படி எனது கால்களைத் தூக்கிக் கொடுக்க அவர் என்னைப் பிடித்து இழுத்தார் அவருக்கு அடி வீழ்ந்தது. அதன்மேல் அங்கு செல்லம்மாவும் சின்னம்மாவும் வர அவர்களையும் அடித்துத்தாத்தினர். பின்னர் செல்லம்மா கல்லால் எறிந்தாள். அக்கல்லு மோட்டாரின் முற்பக்கத்திற் பட்டபடியால் விளக்கும் கண்ணாடியும் உடைந்தன. பின்னர் கனகசபை என்னும் சாரதி வண்டியை இயக்க எல்லோரும் ஏறினார்கள். மோட்டர்வண்டி போய்விட்டது. பின்பு உரும்பிராயில், கல்லதம்பியின் சகோதரிவீட்டிற் பூட்டிவைக்கப்பட்டேன்; கல்லதம்பியின் சகோதரனும் அவன் மனைவியும் கல்லதம்பியை நான் கலியாணம் செய்தல் நல்லதென்று எனக்குப் புத்திபுகட்டினார்கள். அன்று பின்னேரம் என்னைச் சுழிபுரத்திற்கு அழைத்துச்சென்று ஐயனார்கோவிற்பூசாரியின் வீட்டில் அடைத்து வைத்தனர். பின்பு பொலிசார் வருகின்றனர் என அறிந்து பறளாய் முருகமூர்த்தி கோவிலுக்கு அணித்தாகவுள்ள நடராசக் குருக்கள் வீட்டில் வைத்தார்கள். அங்கும் பொலிஸ்காரர் தேடும்போது மின்சார வெளிச்சத்தைக் கண்ணுற்றேன். கண்டதும் சத்தமிட 1-ம் எதிரி எனது வாயைப் பொத்திச் சத்தமிடாதபடி தடுத்துவிட்டான். பின்னர் வாணிக்குக் கொண்டுபோய் இராமலிங்கக் குருக்கள் வீட்டில் வைத்திருந்தான். அங்கும் பொலிசார் வர, தன்னாலைக் கந்தையாவினது வீட்டிற்கு இவர்கள் கொண்டு சென்றனர். அவ்வீட்டில் 8 நாட்களாக இருந்தேம். இங்குதான் எதிரி என்னைப் பலாத்தமாகக் கற்பழித்தான்.*

*"பின்னர் 1-ம் எதிரி ஓர் வியாழக்கிழமையிரவு 11 மணியளவில் என்னைப் பொலிஸ் தானத்திற்கு அழைத்துச்சென்றான். செல்லுமுன் அவன், "நான் பொலிசர் யாவருக்கும் லஞ்சம் கொடுத்திருக்கிறேன். நீ அங்கு என்னையே விவாகம் செய்வதென்று சொல்லவேண்டும். அன்றேல், உன்னை இந்தியாவுக்குக் கொண்டுபோய் விடுவேன்; பின்னர் என்னை ஒருவரும் பிடிக்க முடியாது" என்றான்! நானும் அவன் சொன்னமாதிரியே பொலிசரிடம் சொன்னேன். பின்னர் வெள்ளிக்கிழமை நீதிபதிமுன் சமூகமானேன்."*

*இதன்பின், தெய்வானை, சபாபதி, எஸ் ஐயாத்துரை, இராமலிங்கக் குருக்கள், சரவணமுத்துப் பூசாரி முதலியோர் சாட்சியம் பகர்ந்தனர். வழக்குத் தவணையிடப்பட்டிருக்கிறது. எதிரிகள் இப்போது பிணையில் விடப்பட்டிருக்கின்றனர்.*

# அரவிந்தகோஷ் தனதுபத்தினிக்கு எழுதிய அறிவுரை.

1 ம் பக்கத் தொடர்ச்சி.

ஈசன் உலகத்திலே அனுப்பியிருக்கிறார். என் பதினலாம் வயதிலே இந்த விதை அங்குரித்தலாயிற்று. பதினெட்டாம் வயதில் என் மனத்திற் கலங்காததும் அசைக்கமுடியாததுமான உறுதி பிறந்து விட்டது. சின்னம்மாள் உன்னிடத்தில் இவ்விஷயத்தைப்பற்றிப் பேசிய பொழுது, நீ சூதுவாதறியாத சாதுவான என் கணவனை யாரோசில துஷ்டர்கள் தீய வழிகளிலே இழுத்து விட்டார்கள் என்று சொல்லி வருத்தமடைந்தனையாம்; அது மெய்யன்று. உனது சாதுவான கணவனே அந்த மனிதர்களையும் நூற்றுக்கணக்கான வேறு பலரையும் அவ்வழியிலே கொண்டு சேர்த்தான். அவனே அது நல்வழியாயிருப்பினும் தீயவழியாயிருப்பினும் அதில் இன்னமும் எத்தனையோ ஆயிரம் பேர்களைக் கொண்டு சேர்க்கத் துணிந்திருக்கிறான். எனது வாழ்நாளுள் இம்முயற்சி நிறைவேறி முடிந்துவிடுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் இது நிறைவேறியே தீருமென்பது நிசம். அதை எவராலும் நிறுத்த முடியாது.

இவ்விஷயத்தில் நீ என்ன செய்யப்போகின்றாய் என்பதை எனக்கு அறிவிக்கவேண்டும். மனைவியே கணவனுக்குப் பெரியதோர் தைரிய ஏதுவாயிருக்கிறாள். உஷையைக் குருவாகக் கொண்ட நீ மற்றவர்களைத் தெய்வங்களாகக் கருதி வணங்கும் தர்மத்தையா அனுஷ்டிக்கப் போகிறாய்? உனது கணவனுடைய முயற்சியிலே அசிரத்தையாயிருந்து நீ அவருடைய பலத்தைக் குறைக்கவிரும்புவாயா? அல்லது உன்னுடைய அநுதாபத்தாலும், தைரியத்தாலும் அந்தப் பலத்தை இருமடங்காக்கப் போகிறாயா? உன்னைப் போன்ற சாதாரணபெண் இத்தனை பெரும் காரியங்களில் என்ன செய்ய முடியும்? எனக்கோ போதுமான மனோதைரிய மேனும் அறிவேனுமில்லை இவ்விஷயங்களை நினைக்கக்கூட எனக்குப் பயமாயிருக்கிறது என்று நீ ஒருவேளை சொல்லக் கூடும். இதற்குச் சுலபமான வழியொன்று சொல்லுகிறேன். ஈசனைச் சரணாக அடைந்து கொள். ஈசனை வெல்வதாகிய மார்க்கத்திலே பிரவேசிக்க முயற்சிசெய் அவன் உன்னிடத்திலுள்ள குறைகளை எல்லாம் நீக்கிவிடுவான். ஈசனையொருவன் சரணென்று அடைந்த உடனே அவனைவிட்டு அச்சமென்ற சொருள் அஞ்சி ஓடத் தலைப்படுகிறது. யார் என்ன சொல்லிய போதிலும் நீ அதனைப் பொருட்படுத்தாமல் நான் சொல்வதிலேயே நம்பிக்கை கொள்வாயானால், எனது சக்தியை உனக்குத் தருவேன். அதனால் என் வல்லமை குறையாது. மனைவியே கணவனுக்குத் தைரிய ஏது ஆவாள் என்பதை நான் உனக்கு மீண்டும் வற்புறுத்திச் சொல்லுகிறேன் தனது சொந்தச் சாயையை அவன் தன் மனைவியிடத்தே காண்பதனாலும் தனது உள்ள விருப்பத்தின் எதிரொலியை அவளிடமிருந்து கேட்பதனாலும் அவனது வல்லமை இருமடங்காகி விடுகின்றது.

நீ எப்பொழுதும் நல்ல உடைகள் தரிப்பதிலும், உணவுகள் உண்பதிலும், ஆடுவதிலும், பாடுவதிலும் பலவித சுகங்களை அநுபவிப்பதிலும் நீங்காத விருப்பமுடையவளாய் உனது காலத்தைக் கழித்து இறப்பதுதான் பெரிதென்று நினைக்கிறாயோ? அவ்விதமான மனநிலை பக்குவ வழியை உணர்த்துவதென்று தற்காலத்தில் நமது நாட்டுப் பெண்களெல்லாம் இந்த மகா பரிதாபகரமான ஈனத் தன்மை கொண்ட மனநிலை பொருந்தியவர்களாய் இருக்கிறார்கள். நீ இவற்றையெல்லாம் மறந்துவிடு. என்னுடனே வா. தேவ காரியத்தை நிலை நிறுத்தும் பொருட்டு நாம் இவ்வுலகத்திற்கு வந்திருக்கின்றோம். அதனை இப்பொழுதே தொடங்குவோம்.

உன்னுடைய இயற்கையிலே ஓர் பிழை உள்ளது. நீ கொஞ்சமேனும் சூதுவாது தெரியாதவளாய் இருக்கிறாய். ஆனால் உன்மனம் எப்போதும் அமைதியற்றதாகிறது. அறிவு வளர இடமில்லை எந்தக் காரியத்திலும் சிரத்தை உண்டாகிறதில்லை. இதை நீ விருத்தி செய்துகொள். ஒருவர் பேச்சை மட்டிலும் கேட்டு நீ அறிவு சம்பாதித்துக் கொள்ள வேண்டும். ஒரே நோக்கத்துடனும் திட சித்தத்துடனும் எடுத்த காரியத்தை நிறைவேற்றப் பழகுதல் வேண்டும். மற்றவர்களுடைய பழிச் சொற்களையும் இகழ்ச்சிகளையும் பொருட்படுத்தலாகாது.

இன்னும் ஓர் பிழை உன்னிடம் உளது. ஆனால் அதை உன் பிழையாய் மட்டிலும் கருதக் கூடாது. இந்தக் காலத்தையே சார்ந்தோர் பிழையாகக் கொள்ள வேண்டும் (மற்ற இடங்களில் எவ்வாறாயினும்) வங்காளத்திற் காலம் அப்படித்தான் இருக்கிறது. சிரத்தைக்குரிய விஷயங்களை ஜனங்கள் சிரத்தையுடன் பார்க்க மாட்டோமென்கிறார்கள்.

தர்மம், அருள், மனோரதம் உயர்ந்த முயற்சிகள், தேச விடுதலைக்குரிய வழிகள் இவைபோன்ற சிரத்தைக் கிடமான பெரிய விஷயங்களை இக்காலத்துச ஜனங்கள் எளிதாகப் பேசிநகைத்துவிடுகின்றார்கள். பிரம சமாசப் பாடசாலைகளிற் படித்தது நிமித்தமாக உன்னிடத்திலும் இந்தப் பிழை ஏற்பட்டிருக் கின்றது. சாலியினிடத்திலும் இக்குற்றம் இருந்தது நம்மவர்கள் எல்லோரிடத்திலும் இது கொஞ்சம் இருக்கத்தான் செய்கிறது. தேவகிரி ஜனங்களுக்குள் இது ஆச்சரியமாக வளர்ச்சி பெற்றிருக்கின்றது. இவ்விதமான நிலையை நீ திடசித்தத்துடன் ஒழிக்க வேண்டும். நீ இதை எளிதாகச் செய்தல் என்ற வழக்கத்தை ஒரு முறை எடுத்துக் கொள்வாயானால், உனது உண்மையான சுபாவம் பிரகாசமடையும். மற்றவர்களுக்கு நன்மை செய்வதிலும், ஆத்மத் தியாகம் செய்வதிலும் உனக்கு இயற்கையிலே பிரியமுண்டு. உனக்கு வேண்டியவெல்லாம் மனோ பலமேயாகும். அந்தப்பலத்தை நீ ஈசனைத் தியானம் செய்வதாற் பெற்றுக் கொள்வாய்.

இதுதான் என்னுடைய மகா ரகசியம். இவற்றை யாருக்கும் வெளியிடாமல் தனியே இருந்து யோசனை செய். இவற்றில் அஞ்சுவதற்கு யாதொரிடமுமில்லை. ஆனால் தியானஞ் செய்து பார்ப்பதற்குரிய விஷயம் அதிகம் இருக்கிறது. ஆரம்பத்திலே தினம் அரைமணி நேரம் உனது விருப்பங்களைப் பிரார்த்தனைகள் மூலமாக வெளியிட்டு ஈசுவரத் தியானஞ் செய்து வருவாயானால், போதும். இதைவிட அதிகமாக ஒன்றும் செய்ய வேண்டாம். நாளடைவிற் பக்குவ நிலையடைந்து விட்டோமென்பது உனக்கே தோன்றும்.

ஈசா! எனது கணவனுக்கு நான் ஒரு தடையாக இராமல் அவனுடைய ஜீவலட்சியத்திலும் அவன் முக்திக்குச் செய்யும் முயற்சியிலேயும் அவனுக்கு உதவி செய்து துணை நிற்கும்படி அருள் செய்வீராக என்ற பிரார்த்தனையை ஈசனிடத்தில் எப்போதும் கேட்டுக்கொள்.

—"முன்னேற்றம்"

# ஜெயத்திலகாவின் தந்திரமா?

## சிறுபான்மையினருக்கு அழைப்பு

### அரசியல் திருத்தத்திற்கு எதிர்ப்பா காரணம்?

அரசாங்கசபையில் உள்நாட்டு மந்திரியாயுள்ள சேர் டீ. பீ. ஜெயத்திலகா என்பவர் சிறுபான்மைச்சாதியினருள் உள்ள சில "பிரபல தலைவர்"களை ஓர் மகாநாட்டிற்கு அழைத்திருக்கின்றனர் என்று கொழும்பு டெயிலிநியூஸ் பத்திரிகை கூறுகிறது. மகாநாடு மிநகாநிகன் சங்க மண்டபத்தில் வருகிறசனிக்கிழமை கூடுமாம்.

மந்திரிமார் அனுப்பியுள்ள அரசியல் திருத்தப் பிரேரணைகளுக்கு அரசாங்கசபையில் உள்ள சிறுபான்மையினர் ஆதரவு அளிக்கவில்லை, எனவே அது பற்றி என்ன செய்யலாம் என்பது பற்றி ஆலோசிக்கவே இம்மகாநாடு சேர் ஜெயத்திலகாவாற் கூட்டப்படுகிறது.

## பெண் பாடசாலைகளில் சமையல் பழக்குதல் வேண்டும்.

"இலங்கையில் அரசினர் உதவிப்பணம் பெறும் பெண்பாடசாலைகளில் சமையலும், வீட்டை ஒழுங்குபடுத்துமுறையும் பயிற்றப்படல்வேண்டும்" என்னும் கருத்துக்கொண்ட ஓர் தீர்மானத்தை, கண்டிப்பிரதிநிதியான மிஸ்டர்ஜோர்ஜ் டீ. சில்வா அவர்கள் தாம் எடுத்தாளப் போவதாக அறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

## நீதிஸ்தலத்திற் கணவனைக் கத்தியாற் குற்றினாள்.

சென்ற வியாழக்கிழமை கழுத்துறைப் பொலிஸ் நீதிஸ்தலத்திலே, தன் கணவனிடம் பராபரிப்புப்பணம் பெறுவதற்காக வழக்கு வைக்க வந்த ஓர் மாது, தனது ரவிக்கைக்குள் மறைத்து வைத்திருந்த கத்தியால் அவனைக் குற்றினாள் என்று சென்ற வெள்ளிக்கிழமை வந்த செய்தி ஒன்று கூறுகிறது இந்தக் கோரக் காட்சியைக் கண்ட இருபெண்கள் அறிவுமயங்கிக் கீழே வீழ்ந்தனர். காரணமின்றிக் கணவனைக் குற்றிய அக்காரிகை உடனே சிறையாக்கப்பட்டாள்.

சிறு கதைப் பகுதி.

# அன்பு, நட்பு, காதல் அல்லது ரோசாபீகம்

அ. ஈஸ்வரி எழுதுவது.

(12-2-34-ன் தொடர்ச்சி)

படலையைத் திறந்து வந்தவர் யார் என்பதை அவதானிப்போம்; அரையிற் காவியுடை மாத்திரம் உடுத்தவர்; நீண்டு சுருண்ட கூந்தலுடையவர்; முகத்தில் அரும்பிய மயிர்களிலிருந்து, அவர் 25 வயதுக்கு மேற்படாதவரென்று சொல்லலாம். கழுத்தில் உருத்திர மணியும், கையில் யோக தண்டமும் பொருந்தப் பெற்றவர்; சாற்காலச் சந்திரன் நிறமுடைய தேகம் முழுதும் விபூதி உத்தூளனமாகத் தரித்தவர்; அவரின் முகவிலாசமோ சொல்லுந்தரமன்று; முன்னொருகால் தாருகாவன ரிஷிபன்னியரின் கற்பைச் சோதிக்கவந்த சங்கரச் சந்நியாசியோ இவர் என்று எவரும் ஐயுறத்தக்க கோபிரசடையும் உல்லாசவதனமும் அன்னவர்பாற் பொருந்தியிருந்தன. சுருங்கச் சொல்லுங்கால் ஆடவருக்குரிய சகல சாமுத்திரிகா லட்சணங்களும் அவர்பாற் பொலிந்திருந்தன.

❀

இத்தகைய லட்சணங்கள் அமையப் பெற்ற வாலிப சந்நியாசி, அநுமதிதானும் கேட்காது நேரே நோயாளியின் படுக்கையண்டை சென்றார். முஸ்லீம்கள் வசிக்கும் ஓர் வீட்டிற்குள் ஓர் இந்துவாலிபச் சந்நியாசி அஞ்சாது வந்ததை நோக்கிய எல்லோருந் திகைத்தனர்; பெண்கள் யாவருந் தங்கள் தங்கள் முக்காடுகளினால் முகங்களை மூடினர்; சந்நியாசி, காத்திராத வண்ணம் திடீரென வந்ததாலும், நோயாளியை விட்டுப் போக இயலாமையாலும், ஆங்குள்ள பெண்கள் எவரும் உள்ளே சென்று மறைய முடியவில்லை. நமது சந்நியாசியோ அவர்களை நோக்காது வீட்டின் திண்ணையில் உட்கார்ந்து 'சிவசிவ"என்று தன் பட்டுபையிலிருந்த விபூதியை எடுத்துத் தன் நெற்றியில அணிந்தார்

❀

சந்நியாசியின் செயல்களனைத்தையும் நோக்கிய அகமதுல்லாவின் முகத்திற் கோபம் பொங்கியது; கண்களினின்றும் நெருப்புப்பொறிகள் பறந்தன; சுவரில் தூக்கப்பட்டிருந்த நீண்ட வாளைக் கையிலெடுத்துச் சந்நியாசியை நோக்கி ஓடிவந்தான்; தன்றந்தையின் கோபத்தைக் கண்ட ரோசாபீகம், "அப்பா" என்று அன்னவன் கையைப் பிடித்திழுத்தாள். அகமதுல்லா அப்பாற் செல்ல முடியவில்லை. "சீ! துஷ்டா! நீ யார்! அன்னியனுகிய நீ ஈண்டு வந்ததன் காரணமென்ன? சீக்கிரம் சொல்; அன்றேல் ………………

சந்நியாசி: "ஐயா, கோபம் வேண்டாம்; ஏதோ என் பசிப்பிணியை ஆற்ற வேண்டி இங்கு வந்தேன்; தங்கள் நிலைமையைக்கண்டு செய்வதின்னதென்றறியாது திகைக்கிறேன்; எனினும், அந்தச் சாட்சாத் கைலாசபதியின் அருளாலும் என் குருநாதன் கடைக்கண்பார்வையாலும் தங்களுக்குநேர்ந்த குறையை என்னாற் போக்க முடியுமென்றே எண்ணுகிறேன்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் ரோசாபீகத்தின் வாடிய முகம், மழையைக்கண்டு வாடிய பயிரென மலர்ந்தது.

அகமத்: ஆகா! பணம் பறிக்கும் ஹிந்துப் பைராகிகளில் ஒருவனு நீ! சரிதான், போ அப்புறம்; எமது குறையை நீ தீர்க்கவேண்டாம்

சந்நியாசி: சாகிப்! தாங்கள் அப்படிச் சொல்லவொண்ணுது! நீங்கள் எனக்கு ஒரு உபகாரமுஞ் செய்யவேண்டாம்; நான் இந்த நோயாளியின் முகத்தை ஒரு முறை பார்த்தாற் போதும்; என்வசமுள்ள மூலிகைகள் சிலவற்றைக் கொண்டு, முடியுமானல், அன்னவரின் நோயைத் தீர்க்கிறேன்!

அகமத்: மறுபடியும் ஆரம்பித்தாயா! அப்பாற் செல்.

இவர்களிருவரினதும் சம்பாஷணையையும், வாலிபச் சந்நியாசியின் முகக் குறிப்பையும் நன்கு அவதானித்த ரோசாபீகம் தன்னிடம் வரும்படி தன்றந்தைக்குச் சைகைசெய்தாள்.

❀

"அப்பா, அன்னவரின் முகத்தைப் பார்க்குமளவில் எனதன்னையின் நோயைக் குணமாக்குவார்போலத் தோன்றுகிறது. எனவே, அவரும் முயன்றுதான் பார்க்கட்டுமே! இன்னும் ஏதோ எமக்கு நல்ல காலம் வரப்போகின்றது என என் மனத்தினும் என்னையறியாது ஏதோ சொல்கிறது" என்று குயிலினு மினிய குரலால் ரோசாபீகம் தன் தந்தையை வேண்டிக்கொண்டாள். வாலிபனின் வேண்டுகோளுக்கு இணங்குவதால் வரும் நட்டம் ஏதுமில்லையென்பதை யுணர்ந்து அகமதுல்லாவும் ரோசாபீகத்தின் வேண்டுகோளுக்கிணங்கினன்

❀

நோயாளியின் முகத்தை மூடியிருந்த மஞ்சட்பட்டு அகற்றப்பட்டது. அம்முகத்தைக் கூர்ந்து அவதானித்தான் வாலிபன். மடியிலிருந்த மூலிகையை எடுத்தான்; இடதுகையின் உள்ளே வைத்து வலதுகைப் பெருவிரலாற் றேய்த்துத் தண்ணீரூற்றிச் சாறாக்கினன். ஐம்புலன்களையுமடக்கி, அகிலாண்டேஸ்வரியையும் தன் குருநாதனையும் மனதில் தியானித்தான். அந்தச் சாற்றிற் கொஞ்சத்தை நோயாளியின் நெற்றியில் தடவியபின, நாக்கிலும் தடவினான். ஒரு நிமிஷம்; இரு நிமிஷம்; மட்சுவரிற் றூக்கப் பட்டிருந்த "சுவிஸ்" மணிக்கூட்டிலிருந்து புறப்படும் "டிக் டிக்" என்னும் சத்தத்தைவிட வேறு சத்தம் ஒன்றும் இல்லை. எல்லோரும் நோயாளியின முகத்தையும் சந்நியாசியின முகத்தையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்தனர். மூன்று நிமிஷம்; நாலு நிமிஷம்; ஐந்து நிமிஷங்கள் கழிந்தன. என்ன புதுமை! 5 நிமிஷத்திற்கு முன் ஒடுங்கிக்கிடந்த நோயாளியின் நாடிகள் தம் தொழிலைச் செய்தன. சுவாசம் சாதாரண வேளைகளிற்போல வருவதும் போவதுமாயிருந்தது. சிறிதுநேரஞ் செல்லக் கண்களைத்திறந்தாள். நோய் அகன்றதற்கறிகுறியாக, அவள் தேகத்தினின்றும் ஆறுபோன வியர்வை சிந்தியது. எல்லோரும் ஆச்சரிய வசத்தராயினர். அகமதுல்லா வாலிப சந்நியாசியை ஆலிங்கனஞ் செய்தான் "எம் குடியை உய்விக்க வந்த தெய்வம் நீயே! நான் ஏதோ என் அறியாமையினால் இழைத்த அபசாரமனைத்தையும் பொறுத்தருள்க"என்று இரந்தான். வாலிப சந்நியாசி அவன் ஆலிங்கனத்தினின்றும் விலகி, "அப்பா! நீ எனக்கு அபசாரம் ஒன்றும் புரியவில்லை. நீயும் நின் சுற்றத்தவரும் இனிது வாழ்வீர்களாக. நான் சென்றுவருகிறேன் விடை கொடுங்கள்" என்றார்.

அகமத்: சுவாமீ! பசித்து வந்தவர்கள், தங்கள் பசியை யாம் தணிக்குமுன் செல்லுதல் நீதியல்லவே! எமக்கு உயிரைக் கொடுத்த தங்களுக்குப் பசியாற்ற வகையற்றேம் என்றல்லவா உலகம் எம்மைக் குறைகூறும் ஆதலால் தயைபுரிந்து நாங்கள் இடும் கூழைப் புசித்தாவது ஏகுதல்வேண்டும்.

சந்நியாசி: சாகிப்! நின் மனைவி குணமடைந்ததே என் பசி தீர்ந்ததற்குச் சமானமாகும். இன்னும் இரண்டு தினத்தில் அன்னவர் பூரண சுகமடைவார். நான் சென்றுவருகிறேன், தடுக்க வேண்டாம்.

என்று சரேலென்று வீட்டைவிட்டுப்புறப்பட்டார் புறப்படும்போது அவர் கடைக்கண்பார்வை நாரீமணியாம் ரோசாபீகத்தின்மீது பட்டது. அன்னவளும் ஒரு நாணமில்லாதவாறு அகமகிழ்ச்சியுடன் உடனே தலைகவிழ்ந்தாள்.

III

"ஆ! ஜெகதீசா! இதுவும் உன்சோதனைதானே! மங்கையர் எண்ணத்தை மனத்தினின்றும் அகற்றியநான், இவ்வாறு ஓர் வனிதையால் வருந்துவது உன் சூழ்ச்சியின் பயனே? ……… சீ! பேதைமனமே! உன்னென்ன மிருந்தவாறென்னே! நினைவில்லையென்ன? கஷாயம் உடுத்தி நாடோடியாய் வறுமையை மேற்கொண்டு உழல்கின்றாய். அவளோ வனிதையர்க் கரசி! மாதுசிரோமணி! செல்வத்துட் பிறந்து செல்வத்துள் வளர்பவள்; செல்வத்திற்கேற்ற அழகு பொருந்தப்பெற்றவள்; இன்னும் நீ ஹிந்து; அவளோ முஸ்லீம்; இரியும் பாம்பும், வேங்கையும் பசுவும் ஒத்து வாழ்ந்தாலல்லவோ அவளை நீ மணமுடிக்கலாம்! எட்டாதாயின் வெட்டெனமற."

இப்படி ஆலோசித்துக்கொண்டே, ஓர் நதிதீரத்தினகண், வெள்ளிய நிலவில் ஓர் அழகிய வாலிபன் உலாவிக்கொண்டிருந்தான்; நந்தம் பொதிந்த மந்தமாருதத்தால் அவனது நீண்ட சுருண்ட மயிர் அசைகின்றது.

தன்னந்தனியே அந்த நிலவில் ஆலோசனையுடன் நிற்பவன் யார்?—(தொடரும்.)

## "நெல்லுக்குற்றி உழைத்துக் காப்பேன்"

——:*:——

### 14வயது மங்கையின் காதல் மர்மம்

——(*)——

### திருக்கோணமலைச் சம்பவம்.

"எனது காதலருக்குக் கையில்லாவிட்டாலும், நான் உழைத்து அவரைப் போஷிப்பேன்" என்று 14 வயதுடைய ஓர் பெண், சென்ற வெள்ளிக்கிழமை திருக்கோணமலை நீதிபதிக்குக் கூறினள்.

சென்ற வியாழக்கிழமை யிரவு, சினித்தம்பி என்னும் ஒற்றைக் கையில்லாதவனும் ஜானகியம்மாள் என்னும் 14 வயதுடைய பெண்ணும் பொலிஸ்தானத்திற்குச் சென்று தாம் மணம் முடிக்க விருப்பமுதாகப் பொலிசாருக்குக் கூறினர். பொலிசார் அவர்களிருவரையும் அங்கு தானே அன்றிரவு மறித்துவிட்டு அடுத்தநாட் பொலிஸ் நீதிஸ்தலத்தில் அவர்களை ஒப்புவித்தனர். பெண்ணின் மாமனுகிய சே. செல்வத்துரை என்னும் வர்த்தகர் பொலிஸ் நீதிபதியிடம் பின்வருமாறு கூறினர்:

"ஜானகியம்மாள் எனது மருமகள்; அவளுடைய தாய் யாழ்ப்பாணஞ் சென்றபோது அவளை எனது பாதுகாப்பில்விட்டுச் சென்றார். அவளின் வயது 14 மாத்திரமே சென்ற இரவு ஜானகியைக் காணவில்லை. நான் விசாரணை செய்த அளவில் சினிமுத்துவுடன் பொலிஸ்தானத்திற்குச் சென்று விட்டாள் என்று அறிந்தேன். சினி முத்துவுக்கு ஓர் கையில்லை. அதனால் ஏதும் உழைக்கமுடியாது."

இவரின் சாட்சியத்தின்பின், நீதிபதி ஜானகியை அழைத்து

நீதிபதி: கையில்லாத ஒருவனை மணம் செய்ய நீ ஏன் அவாவுகின்றாய்?

ஜானகி: அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை.

நீதிபதி: உழைத்து, உன்னைப் பாதுகாக்க அவனால் முடியாதே!

ஜானகி: நானே உழைத்து, நானே அவரைப் போஷிப்பேன்.

நீதிபதி: காதலுக்குக் கண்ணில்லை என்பது உன் விஷயத்தில் உண்மையாகிவிட்டது.

மேலும் ஜானகியம்மாள் என்ற மங்கை கொடுத்த சாட்சியம் வருமாறு:—

"எனது தந்தை உயிருடன் இருக்கின்றாரோ இல்லையோ என்பதைப்பற்றி நான் அறியேன். எனது தந்தை முன்னர், என் அன்னையைவிட்டுப் பிரிந்தது எனக்குத் தெரியும். அந்நாள் தொடக்கம் நான் என் தாயுடனேயே வசிக்கின்றேன். எனது தாய் யாழ்ப்பாணம் சென்றபோது, அவ என்னை என் சிறியதாய் பொறுப்பில் விட்டுச்சென்ருர். செல்வத்துரை பொறுப்பில் விடவில்லை. சிறுபாராயந்தொட்டுச் சினிமுத்துவை எனக்குத் தெரியும். எனக்கு இப்போது 14 அல்லது 15 வயதுவரையில் இருக்

"நாம் இருவரும் மணமுடிக்கப்போகின்றோம் என்பதை அறிவித்தற்காகவே சென்ற இரவு பொலிஸ்தானத்திற்குச் சென்றோம்.

"சினிமுத்துவுக்குத்தான் என்னை மணமுடித்துக் கொடுப்பதென்று எனது தாய் முந்தி எண்ணியதுண்டு; "டைனமயிற்" வெடித்ததால் அவர் ஓர் கையை இழந்தபின் அந்த எண்ணத்தை அவ மாற்றிவிட்டா. ஆனால், நான் அவரையன்றி வேறெவரையும் மணம் செய்யேன்.

நீதிபதி: உன் புருஷனுக்கு எவ்வாறு உழைத்துக்கொடுப்பாய்?

ஜானகி: நெல்லுக்குற்றி உழைத்து அவரைப் பாதுகாப்பேன்.

இதன்பின், வயதிற் குறைந்த பெண்ணைக் கடத்தினன் என்று சினிமுத்து குற்றஞ்சாட்டப்பட்டான். அவன் கூறியன:—

'நான் சுற்றவாளி; இப்பெண்ணே, என் வீட்டிற்கு வந்து என்னை அழைத்தாள். நான் அவளை மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன்"

நீதிபதி சினிமுத்துவை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டு 27-ம் தேதிக்கு வழக்கைத் தவணையிட்டார். பெண்ணை மாமனுடன் போகும்படி கட்டளையிட அவள் சம்மதியாது நின்றாள்.

---

### ஸ்ரீமதி மூரியல் லிஸ்ரர்.

மகாத்மாகாந்தியடிகள் இரண்டாவது வட்டமேசை மகாநாடு சம்பந்தமாக, லண்டனில்நின்றபோது, அன்னவர் தங்கியிருந்தற்கு இடவசதி அளித்து உபசாரம் செய்த மூரியல் லிஸ்ரர் என்னும் பெண்மணி இன்னும் சில தினங்களில் இலங்கைக்கு விஜயம் செய்வார் என்று அறிகிறோம்.

## பண்டிதர் நேருவுக்குச் சிறைத்தண்டனை.

——(*)——

### இராசத்துரோகபிரசாரணமே காரணமாம்!

பண்டிதர் ஜவஹர்லால் நேரு சென்ற வெள்ளிக்கிழமையன்று கல்கத்தாப் பொலிஸ் நீதிபதியால் 2 வருஷ வெறுங்காவற் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டார்.

சென்ற ஜனவரிமாதம் 17-ம் 18-ம் தேதிகளில் கல்கத்தாவில் இராசத்துரோகமான பிரசாரணங்கள் நிகழ்த்தி மக்களுக்கிடை இராசத்துரோகத்தைப் பரப்பினார் என்பதுவே அவர் மீதுள்ள குற்றச்சாட்டாகும்; பண்டிதர் அவர்கள் விசாரணையிற் பங்குபற்றவில்லை.

---

### 12 லட்சத்து 20 ஆயிரம் ரூபா.

பீகார்ப் பூகம்பச் சேத சகாய நிதியின் பொருட்டுச் சென்ற வியாழக்கிழமை வரையில் பாபு இராஜேந்திரப் பிரசாத் அவர்களுக்கு 12 லட்சத்து இருபதினாயிரத்து எழுநூற்று எழுபத்தொன்பது ரூபா சேர்ந்திருக்கிறது என்று அறிகிறோம்.

---

### ஜப்பானியபொருள்களுக்கு மதிப்பு

சிங்கப்பூர் வர்த்தகரின் புதிய முயற்சி.

சிங்கப்பூரில் ஜப்பானியப் பொருள்கள் மிக்க மலிவாக விற்கப்படுவதால், இதுகாறும் பிரிட்டிஷ் பொருள்களை இறக்குமதி செய்து விற்றுவந்த வர்த்தகர், அவற்றைவிடுத்து, ஜப்பானிய பொருள்களையே விற்பதெனமுடிவு செய்திருக்கின்றனர். இதனாற் பிரிட்டிஷ் வர்த்தகருக்கு மிகுந்த கஷ்டம் ஏற்படும் என்று தெரிகிறது.

---

### இன்னொரு பூகம்பம்?

பீகாரில் நேர்ந்துள்ள பூகம்பத்திலும் பார்க்க மிக்க அபாயம் விளைக்க் கூடிய பயங்கரமான பூகம்பம் ஒன்று பர்மாவில் இருந்து 2900 மைல்களுக்கப்பால் சென்ற புதன்கிழமை நேர்ந்திருப்பதற்கான அறிகுறிகள் தோன்றியன என்று பம்பாய் வானசாஸ்திர நிபுணர்தெரிவிக்கிறார். கிழக்கிந்தியத் தீவுகளிலேயே அப்பூகம்பம் ஏற்பட்டிருக்கக் கூடும் என அவர் கருதுகிறார். அதைப்பற்றியவிபரம் இன்னும் ஒன்றும் தெரியவில்லை.

---

### ஆங்கில-பிரான்சிய வர்த்தகப் பிணக்கு.

பிரான்சிய அரசினர் பிரிட்டிஷ் பொருள்களுக்கு அபரிமிதமான சுங்கவரித்தீர்வை விதித்துள்ளமையும் பிரிட்டிஷார் கண்டித்தமையும் முந்தியே இப்பத்திரிகையில் வெளிவந்தனவாகும். தங்கள்கண்டனத்துக்குப் பிரான்சிய அரசினர் செவிசாய்க்காததைக் கண்ட பிரிட்டிஷார், பிரான்சியப் பொருள்களுக்கும் மேலதிகமான சுங்கவரித்தீர்வை விதிப்பது என்று பாராளுமன்றத்தில் சென்ற வியாழக்கிழமை ஓர் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

---

### "சிறப்பும்செல்வமும்பெருமையுமுடையோர் அறக்கூழ்ச்சாலை அடையினுமடைவர்"

பலலட்சக்கணக்கான மக்கள் இப்போது அமெரிக்காவில் வேலையின்மையால் வாடுகிறார்கள். அவர்களுக்கு உதவி செய்யுமாறு அரசினர் 95 கோடி வெள்ளி அளித்திருக்கின்றனர். தருமஉதவி பெறுபவர்களில்இற்றைக்குச் சில ஆண்டுகளுக்குமுன் கோடீஸ்வரராகவிருந்து வறுமையால் தாக்கப்பட்ட அநேக செல்வருமுளர். இப்போது 50000 பேர் பணஉதவி பெறுகின்றனர். அவர்களில் 50 பேர் இற்றைக்கு இருஆண்டுகளின் முன்னர் வருடந்தோறும் 5 லட்சம் வெள்ளி (15 லட்சம் ரூபாவுக்குமேல்) வருமானம் பெற்றவராவர்.

---

### இன்னொரு விசாரணைச் சபை?

பாராளுமன்றத்தவரின் ஆலோசனை.

இந்திய அரசியற்றிருத்தத்தைப் பற்றி ஆலோசிக்குமுன் இலங்கையில் ஜனநாயக ஆட்சி கொடுக்கப்பட்டதன் பயன் என்னவென்பதை விசாரித்தறிய ஓர் விசாரணைச்சபையை இலங்கைக்கு அனுப்பவேண்டும் என்னும் தீர்மானத்தை பாராளுமன்றத்தங்கத்தவரான சேர் ஹென்றி பேஜ் குறப்ற் வருகிற 21-ம் தேதி எடுத்தாளுவார். இலங்கையில் ஜனநாயக ஆட்சி இருக்கிறதென்றும் அதனால் இலங்கையர் ஐரோப்பியருக்கு மாறுதக்கருமம் ஆற்றுகின்றனர் என்பதும் பிரிட்டிஷார் சிலரினது தப்பான எண்ணமாகும்.

---

## COMMISSION SALE.

விற்பனவு விளம்பரம்.

—— 0 ——

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு வழக்கு இலக்கம் 4994,

வழக்காளி - அல்வாய் வடக்கு, S. பெரியதம்பி முருகுப்பிள்ளை.

எதிரிகள் - 1. வல்வெட்டித்துறை, பொன்னம்பலம் திருச் சிற்றம்பலம் 2 வல்வெட்டித் துறை, பொன்னம்பலம் துரைசாமி 3. வல்வெட்டித் துறை திருச்சிற்றம்பலம் குழந்தைவேல் பிள்ளை 4. காலஞ்சென்ற பொன்னம்பலம் சைம்பெண் அன்னப்பிள்ளையின் தத்துவகாரனுகிய வல்வெட்டி சின்னத்தம்பி தம்பாபிள்ளை 5. வல்வெட்டி, இளையதம்பி மாணிக்கம்.

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வையின் படியும், குறித்த கோட்டின் உத்தரவுப்படியும் இதன் கீழ்க் காணும் ஆதனங்கள் 1934 ம் ஆண்டு பங்குனி மாசம் 12 ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணிதொடக்கம் குறித்த ஆதனக்களிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனங்கள்.

1. வடமாகாணம், யாழ்ப்பாணப் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி, உடுப்பிட்டிக் கோவிற்பற்று, தனக்காரகுறிச்சி, கொட்டைப்பனை நிலப்பரப்பு $34\frac{1}{2}$ இதன் தெற் கரைவாசியில் வடக்குப்புறமாக நிலப்பரப்பு 11. இதில் வடக்குப் பக்கத்தில் குளி $11\frac{1}{2}$ பிறகிளலாகமிகுதி நிலப்பரப்பு 10 குளி $6\frac{1}{2}$க்கு எல்லை கிழக்கு இதன் கிழக்காலும் இரண்டாம் ஆதனம், வடக்கு எதிரிகளுக்குரிய ஆதனம், மேற்கு வெண்கரை, தெற்கு அய்யாமுத்துப்பெண் தங்கத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இவ்வெல்லைக் குட்பட்ட சகல ஆதனத்தின் வடக்கரை வாசியிலிருக்கும் கிணற்றிலும் சோத்தம்பை வடக்கு என்னும் ஆதனத்திலிருக்கும் கிணற்றிலும் இதற்குரிய பங்கும் வழி வாய்க்காலுரித்தும் $A\frac{176}{82}$ ம் இலக்கத்திற் பதிவு செய்யப் பட்டது.

2. மேற்படி குறிச்சி கொட்டைப் பனையும், தொற்றன் ஒல்லையும் நிலப்பரப்பு 9, குளி $8\frac{181}{160}$ எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு மேற்குறித்த முதலாம் ஆதனமும், எதிரிகளுக்கும் மறுபேருக்குமுரிய வாதனமும், தெற்கு அய்யாமுத்துப்பெண் தங்கத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் இவ்வெல்லைக் குட்பட்ட நிலம், வான்பயிர், செய்பயிர் கிணறு அடங்கலும், சோத்தம்பை வடக்கு என்னும் ஆதனத்திலிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழி வாய்க்காலுரித்தும் $A\frac{176}{88}$ ம் இலக்கத்தில் பதிவு செய்யப் பட்டது.

குறிப்பு:- குறித்த ஆதனங்கள் 1929-ம்ஆ தை 5-ந்வ. முடிந்த ஈட்டுறுதியால் ரூபா 2000/-வுக்கு அதற்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு பன்னிரண்டு வீத வட்டிக்குமாக மேற்குறித்த வழக்காளி S. பெரியதம்பி முருகுப்பிள்ளைக்கு முதலீடாகக் கட்டுப் படுத்தப் பட்டிருக்கிறது.

வி. முதலியார், குழந்தைவேலு,

பருத்தித்துறை, கொம்மிஷனர்.

9 2-34.

(Mis. 213. 19-2-34.)

---

### மலேரியா மஹாதைலம்.

உங்களுக்கு மலேரியா என வழங்கும் மலைச்சுரந் தணியவேண்டில் இத்தைலத்தை உபயோகியுங்கள். இன்னும் தொய்வு ரோகத்துக்கு இது கைகண்ட தைலம் நூற்றுக்கணக்கானோர் நற்சாட்சிப்பத்திர மளித்துளர். கணைக்கு இன்றியமையாதது. இருமல், தொய்வு, ஈளை, பீநசம், தேக எரிவு, "ஹிஸ்ரியா" வாய்வு இப்படியான ரோகங்களை மாற்றுவதில் வலிமை உள்ளது.

இங்ஙனம்,

போ. செல்லையா,

ஆயுர்வேத வைத்தியன்

கந்தர்மடம்

யாழ்ப்பாணம்.

(Y. 204. 12-2—11-2-35)

---

### சாலாமிஸ்திரி லேகியம்.

——*——

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, கிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமூஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தான், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த, செந்தூரம், சம்பிராணிப்பதங்கம் இன்னும், அநேகமுக்கியமான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு,நீர்க்கடுப்பு,நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தநாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் ரோகங்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள் பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா௨0. அரைருத்தலுக்கு ரூபா௧0 கால்ருத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாசிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணிஓடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்.

க. ஆறுமுகம்பிள்ளை,

சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை,

கர்த்தான்குடி போஸ்டு,

மட்டக்களப்பு

Y 179. 1-1-34 to 31-12-34) சிலோன்.

---



### வெளி வந்துவிட்டது!

கந்தபுராணம்—நகராழிபடலவுரை

[1934-ம் 35-ம் ஆண்டுக்கு கேம்பிரிஜ் ஜூனியர்ப் பாடமாகவுள்ளது]

பதவுரை, கருத்துரை, விசேடவுரை, ஆங்கிலமொழிபெயர்ப்பு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதியுள்ள நூலாசிரியர் வரலாறு என்னுமிவைகளுடன், வெளிவந்துவிட்டது.

☞விலை சதம் 50.

ஐந்து பிரதிகளை ஒரே முறையில் வாங்குவர்களுக்கு 1 பிரதி மேலதிகமாகக் கொடுக்கப்படும்.

வண்ணார்பண்ணை 23-12-33. | மானேஜர், இந்துசாதனம்.

---

## லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

எல்லா வலிப்புகளுக்கும் நோவுகளுக்கும்

பாரதநாட்டின் முதன்மையானதும்

சிறந்ததுமான திவ்விய ஔடதம்.

மிருகக்கொழுப்பு கலக்கப்படவில்லை என்பதற்கு

உத்தரவாதம்.

Y 18. 11-2-33—10-2-34-)

## பின்னிற்க வேண்டாம்!

நமது தாய் நாட்டுச் சோதரர் பூகம்ப அநர்த்தத்தில் அகப்பட்டுக் கஷ்டப் படுவதைப் பற்றி நாடோறும் பத்திரிகைகளிற் படித்தும், அவர்களுக்கு உதவிசெய்ய முன்வர வேண்டாமா! இறந்த பல்லாயிரக்கணக்கானவர் போக, எஞ்சி யுள்ளோருக்கு ஊண், உடை, இல்லம் என்பனவற்றை அளித்தலில் உதாரத்துவத்திற் சிறந்த தமிழ் மக்களாகிய நாமும் பங்குபற்ற வேண்டாமா? ஆடவர்களே! பெண் மணிகளே, பாலியரே! உங்களுங்களால் இயன்ற தருமத்தை இந்த இந்துசாதனலையத்திற்கு அனுப்பி வையுங்கள். எச்சிறு தொகையேனும் உவந்தேற்றுக் கொள்ளப்படும் போம் பொழுது அருந்துணை புரிந்த புண்ணியம்.

சென்ற வெள்ளிக்கிழமை யன்று 300 ரூபாயும், முன்னர் 200 ரூபாயும், ஆக 500 ரூபா பீகார் பிரபல தேசீயத் தலைவரான பாபு இராஜேந்திரப் பிரசாத் அவர்களுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது.

மானேஜர்.

| | | |
|---|---|---|
| முன்னர் உபகரிக்கப்பட்டது | | 514 - 75 |
| உடுவிற் பெண்கள் கல்லூரியும் ஆசிரியர் கலாசாலையும் | | 20 00 |

தலைவாக்கொல்லை
அரசினர் பகிரங்கப்பகுதி
ஸ்ரீ K. கந்தையாவாற்
சேகரிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| ஸ்ரீ K. கந்தையா | 5 00 | |
| K. குட்டித்தம்பி | 1 00 | |
| V. சிவசம்பு | 5 00 | |
| S. இரத்தினம் | 1 00 | |
| S. முத்தையா | 5 00 | |
| S. பெரியதம்பி | 1 00 | |
| K. கனகசபை | 1 50 | |
| E. அருணம்பலம் | 2 00 | |
| K. தம்பு | 2 50 | |
| K. தில்லையம்பலம் | 1 00 | |
| | | 25 00 |

முள்ளியவளைச் சைவப்பாடசாலைத்
தலைமையாசிரியர்
ஸ்ரீ R. சிவக்கொழுந்துவாற்
சேகரிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| ஸ்ரீ V. U. குட்டித்தம்பி | 1 00 | |
| K. கணேசஐயர் | 50 | |
| S. S. வடிவேல் | 1 00 | |
| K. மூத்தார் | 50 | |
| S. பொன்னையா | 1 00 | |
| A. இராமசாமி | 50 | |
| S. கணபதிப்பிள்ளை | 1 00 | |
| V. சின்னையா | 50 | |
| M. A. சின்னத்தம்பி | 50 | |
| K. வல்லிபுரம் | 1 00 | |
| A. சிவக்கொழுந்து | 1 00 | |
| K. மார்க்கண்டு | 50 | |
| K. பொன்னையா | 50 | |
| A. செல்லையா | 25 | |
| ஸ்ரீமதி S. செல்லம்மா | 50 | |
| முள்ளியவளைச் சைவப்பாடசாலை | 75 | |
| | | 11 00 |
| மு. கா. வே. அன் கம்பனி குருநாகல் | | 1 00 |
| வட்டுக்கோட்டைச் சைவாங்கில கலாசாலை ஆசிரியர்கள் | | 13 00 |
| சண்டிருப்பாய்ச் சைவாங்கில கலாசாலை மாணவர்கள் | | 11 77 |

தோல்புரம் விக்னேஸ்வரவித்தியாசாலை
ஸ்ரீ A. தியாகராசாவாற்
சேகரிக்கப்பட்டது

ஸ்ரீமான்கள் R. சின்னத்தம்பி 50 சதம், P. முத்துக்குமாரு 50 சதம், P. வைத்திய லிங்கம் 50 சதம், P. சண்முகம் 50 சதம், V. சின்னத்துரை 1-00 ரூபா, M. வல்லிபுரம் 1-00 ரூபா, P. முருகேசு 50 சதம், K. சங்கரப்பிள்ளை 25 சதம், W. இரத்தினசிங்கம் 50 சதம், M. சபாபதிப்பிள்ளை 25 சதம், M. சிற்றம்பலம் 1-00 ரூபா, S. முருகேசு 50 சதம், R. மாணிக்கம் 50 சதம், P. கனகசபாபதி 50 சதம், A. தியாகராஜா 75 சதம், R. சரவணமுத்து 50 சதம், ஸ்ரீமதி அன்னம்மா 50 சதம்.

| | | |
|---|---|---|
| | ஆக | 9 75 |
| ஸ்ரீ V. கனகசபை | | 5 00 |
| S. V. தம்பிராஜா | | 5 00 |
| ஸ்ரீ கணேஷ வாசிகசாலை கழுதாவளை | | 2 00 |
| மாதகல் விக்னேஸ்வரவித்தியாசாலை மாணவரும் ஆசிரியரும் | | 3 75 |
| கண்டி, நீர்ப்பாய்ச்சற்பகுதி ஸ்ரீ A. நடராசா | | 1 00 |

கலகா ஸ்ரீ V. சிவசப்பு சேகரித்தது.

| | | |
|---|---|---|
| ஸ்ரீ V. சிவசப்பு | 1 00 | |
| N. S. சுவாத்தினம் | 50 | |
| முத்து இருளப்பன் | 1 50 | |
| S. சரவணமுத்து | 60 | |
| நாரங்கலைத் தோட்டத் தொழிலாளர் | 16 40 | |
| | | 20 00 |
| 39-1ம் இலக்கவழக்கில் எதிரியிடம் இருந்து யாழ். பொலீஸ் நீதிபதி அனுப்பியது | | 5 00 |
| ஸ்ரீ C. அருணம்பலம், சொந்தக்காரர் வைத்தியசாலை பெரியகடை, யாழ்ப்பாணம் | | 10 00 |
| | ஆக ரூ. | 658-02 |


## அரசாங்க சபைத் தெரிவு!

விளம்பரங்கள் — துண்டுப் பத்திரங்கள் — சுவர் விளம்பரங்கள் முதலியன அழகாகவும் துப்பரவாகவும் பல வர்ண மைகளிலும்

சைவப் பிரகாச யந்திரசாலையில்
அச்சடித்துக் கொடுக்கப்படும்.

சிறந்த வேலை! — உத்தரவாதம்!

ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்.

முற்பணமே கட்டவேண்டும்.

மானேஜர்.


## பொலிசார்மீது குற்றச்சாட்டு.

—:o:—

யாழ்ப்பாணக் கூட்டத்திற் குணசிங்கி.

சென்ற சனிக்கிழமை பின்னேரம் வட இலங்கைச் சகலரத சகாயச் சங்கத்தின் கூட்டம் ஒன்று யாழ்ப்பாணம் முற்றவெளியிற் கூடியது. அரசாங்க சபையில் தொழிற் கட்சிப் பிரதி நிதியாகவுள்ள மிஸ்டர் ஏ. ஈ. குணசிங்கா, மிஸ்டர் எஸ். டபிள்யூ. தலைநாயக்காவென்பவர்களும், மிஸ்டர் எச். ஏ. பி. சந்திரசேகரா, மிஸ்டர் கேசினஸ் செல்வத்துரை, ஸ்ரீ சீ. என் சுப்பையா முதலியோரும் சொற் பொழிவுகள் செய்தனர்.

மிஸ்டர் குணசிங்கியே முதன் முதற் பேசினர். அவர் பொலிசார் தொழிலாளர் விஷயத்தில் இடும் முட்டுக் கட்டைகளைப்பற்றி மிக விரிவாகப் பேசினர். பஸ்காரர், ஒன்று சேரும்போது, அவர்களுடைய ஒற்றுமையைப் பங்கப்படுத்தப் பொலிசார் முயற்சி செய்வது வழக்கம் என்றும், தன்னையே (குணசிங்கி) பொலிசார் 12 வருஷ காலமாக வருத்தியிருக்கின்றனரென்றும், பொலிசாரின் இத்தகைய கிருத்திரமங்கள் ஒழிக்கப் படல் வேண்டுமெனறும் கூறினர். சட்டவிரோதமாக ஏழைப் பஸ்காரச் சாரதிகளைத் துன்பத்துக் காளாக்கிய குற்றத்தின் பேரில் அநேக பொலிசார் வேலையினின்றும் நீக்கப்பட்டிருக்கின்றனர்; பொலிசார் ஒருபோதும் சமாதானமாகவாழவிரும்புவோருக்கு அநியாயம் செய்ய வொண்ணாது. பொலிசாரை உண்மையில் பொது ஜன வழியாராக்க வேண்டுமானால், பொலிஸ் பகுதியின் அமைப்பை முற்றாக மாற்றி விடல் வேண்டும் என்று மிஸ்டர் குணசிங்கி கூறினர். இன்னும் இங்குள்ள சிங்கள பஸ் சாரதிகள் ஏனையோருடன் ஒத்துழைக்க மறுப்பது விசனத்துக்கிடமாகுமென்றும், அவர்கள் தமிழ்ச் சாரதிகளுடன் ஒத்துழைத்தல் வேண்டுமென்றும் அவர்களை வேண்டினர்.

இதன் பின், சர்வசன சம்மதத்தின் பேரில், வட இலங்கைச் சகலரத சகாயச் சங்கம் அகில இலங்கை வர்த்தக ஒத்துழைப்புச் சங்கத்துடன் இணைக்கப்பட்டது.

## பவ வருஷ வாக்கிய பஞ்சாங்கம்.

யாழ்ப்பாணம் சோதிட பரிபாலனமடம் பிரம ஸ்ரீ இரகுநாதையரவர்கள் தத்த புத்திரர் பிரம ஸ்ரீ. சிவராமலிங்கையரவர்கள் பௌத்திரர் பிரமஸ்ரீ. ச பஞ்சாட்சர ஐயரவர்களும் கணித்து, சோதிடப் பிரகாச யந்திரசாலையில் அச்சிடப்பெற்ற, பவ வருஷ வாக்கிய பஞ்சாங்கம் வரப்பெற்றோம்: இது 77ம் வருடப் பஞ்சாங்கமாகும். பிரதி "கிளேஸ்" பதிப்பு சதம் 30 (அணா 5); சாதாரண பதிப்பு, பிரதி, சதம் 25 (அணா 4). பிரதிகள் மேற்படி கணிதர்களிடத்திலும் இலங்கையின் எப்பாகங்களிலுமுள்ள பிரபல கடைக்காரரிடத்தும் பெறற்பாலனவாம்.

எமது பார்வைக் கனுப்பிய பிரதியை உவந்தேற்றோம்.

## காதலிகளின் தொல்லையை நீக்கிய வழி.

டோக்கியோவில் (ஜப்பான்) உள்ள ஒரு சுரங்கத் தொழிலாளிக்கு இரு மனைவியர் இருந்தனர். அவர்களிருவரும் ஒருவர்க் கொருவர் பொறாமை கொண்டு, தமது கணவனை வருத்துவாராயினர். சென்றவாரம், அவன் அவர்களிருவரினதும் பிணக்கைத் தீர்ப்பதாகச் சொல்லி ஓர் ஹொட்டலுக்கு அழைத்துச் சென்றான். அங்கே பெண்கள் இருவரும் உட்கார, தொழிலாளி நடுவில் உட்கார்ந்து மேசையில் வெடி குண்டு ஒன்றை வைத்தான். அது வெடிக்க மூவரும் உடன் மரணமெய்தினர்.

## குற்றவாளிக்காகச் சிறையிருக்க வந்த நிரபராதி.

1932-ம் ஆண்டு நடந்த கஞ்சா வழக்கொன்றில் 1 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட சையது முகம்மது என்ற எதிரி பொலிசாருக்கு மறைந்து இந்தியாவில் நின்றுவிட்டான். இந்திய பொலீசார் அவனைப் பிடிக்கத் தீவிரமாக முயற்சி செய்கையில் 24 - 3 - 33 ல் இந்தியாவிலிருந்து வந்த பிரயாணிகளில் ஒருவன் தான்தான் அந்தச் சையது முகம்மது என்பவனென்றும், தான் சேரில் சரணடைய வந்ததாகவும் வைத்திய அதிகாரியிடம் கூற, அவர் பொலிசாருக்கு அறிவித்தனர். அதன்பின் ஷை தண்டனைக்காகத் தண்டகமுவைப் பொலிஸ் கோர்ட்டில் சையது முகம்மது என்று கூப்பிடுகையில் இந்த மனிதன் முதல் முறை வெளிவாரது இரண்டாவது முறையில் தயங்கி வெளிவர, நீதிபதி அவனமீது சந்தேகம் கொண்டு விசாரிக்கையில் அவன் சையது முகம்மது என்பவனுக்காக அவனது தண்டனையை அநுபவிக்க வந்தவனென்பது தெரிந்தது. அவன் கோர்ட்டை ஏமாற்றிய குற்றத்திற்காக அவன்மீது வழக்குத் தொடரப்பட்டு 9 மாதக் கடுங்காவற் தண்டனை விதிக்கப்பட்டான்.

## காகா கலேல்கார் சிறை.

பிரபல தேசீயத் தலைவரான காகா கலேல்கார் 24 மணித்தியாலங்களுக்குள் ஆமதபாத் நகரை விட்டுப் புறப்படல் வேண்டுமென இந்திய அரசினர் விடுத்த கட்டளையை அவர் நிராகரித்து விட்டமையால், சென்ற வெள்ளிக்கிழமை சிறை வாசக்கப்பட்டார்.

## மகாத்மாவின் திக்குவிஜயம்.

மகாத்மா சென்ற வெள்ளிக்கிழமை பிற்பகல், காரைக்காலுக்குச் சென்றார். எங்கும் போல அங்கும் பல்லாயிரக் கணக்கான மக்கள் அவரது முகதரிசனம் காணவேண்டி நின்றனர். அவர் அங்கு குழுமிநின்றவர்களை நோக்கி, "சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம், என்பவற்றை மூலாதாரமாகக் கொண்ட பிரான்சிய அரசின் கீழ் நீவிர் இருக்கின்றீர்கள். அத்தகைய மக்கள் வாழும் இந்த நாட்டிலும், ஹிந்துக்கள் தமது சகோதரராகிய ஹரி ஜனங்களுக்குச் சமத்துவத்தை, சுதந்திரத்தை அளிக்க மறுக்கின்றனர். இது மிகவும் வெட்கக் கேடான காரியம். சாஸ்திரங்களில் தீண்டாமைக்கு ஆதாரமேயில்லை என்பது எனது அநுபவம்; ஆதலால் இன்றோடு, தீண்டாமை என்னும் பைசாசத்தை இந்நாட்டினின்றும் அகற்றுமின்" என்று கூறினர். இதன் பின் மகாத்மா மாயவரம் வியாலி முதலாம் இடங்களுக்குச் சென்றார்.

## பத்திரிகைகளின் கருத்து.

—(o)—

### தனித்தமிழ்வாதம்.

"தனித்தமிழ்வாதம்" என்ற தலையங்கத்தின்கீழ் இம்மாதத்திய "ஆனந்தபோதினி" (மாதப் பிரசுரம்) பிறபாஷைச் சொற்களின் கலப்பின்றியே தமிழ் முன்னேற்றமடையுமா என்பதைப்பற்றி விளக்கியிருக்கின்றது. "தமிழ் உயர் தமிழ்ச் செம்மொழி என்பதிற் சிறிதும் ஐயமில்லை"யெனினும், காலஞ்சென்ற ஆறுமுகநாவலர், வேதநாயகம்பிள்ளை, வ. வெ. சு. ஐயர், சுப்பிரமணிய பாரதி போன்ற அறிஞர்களின் மணிப்பிரவாள நடையில் அழகு இல்லையென்று யாரேனும் கூறத் துணிவரோ என்று ஆனந்தபோதினி சொல்லி மேலும் கூறுவதாவது: "ஆங்கிலம் உலகத்தில் ஆதிக்கம்பெற்று விளங்குதற்குரிய காரணங்களைத் தனித்தமிழ் வாதிகள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆங்கிலம் தமிழைப் போல் உயர் தனிச் செம்மொழியல்ல; அது ஒரு ஒட்டு மொழி புதிய கருத்துக்களை விளக்கும் வேற்றுமொழிச் சொற்களுக்கு ஆங்கிலம் இன்னும் நல்வரவு கூறிக்கொண்டேயிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான பிறபாஷைச் சொற்களை ஆங்கிலம் தனதாக்கிக் கொண்டிருக்கிறது. அதனால் அது சகல கலைகளும் நிறைந்த அற்புத பாஷையாய் இன்றைய உலகில் அரசு வீற்றிருக்கிறது. பிறபாஷைச் சொற்கலப்பால் ஆங்கிலத்தின் அழகும் அமைதியும் போய்விட்டன என்று நம்மைப்போல் ஓலமிடுவார் ஆங்கிலேயருள் யாவருமில்லை. இந்த உண்மையைத் தனித்தமிழ் வாதிகள் முக்கியமாய்க் கருத்தில் வைக்கவேண்டும்........."

### றப்பர் தொழிற்சாலை.

இலங்கையின் பிரதான விளைபொருளாகிய றப்பர், இப்போது மானமற்று, மிகவும் விலை குறைந்து ஏற்றுமதியின்றி இருக்கின்றமையால், அந்த றப்பரைக்கொண்டு எமக்கு வேண்டிய பொருள்களை இங்கே உண்டாக்க முயற்சி செய்யவேண்டும் என்று கொழும்பு "டெயிலிநியூஸ்" பத்திரிகை கூறுகிறது. 1931-ம் ஆண்டு, 3,254,335 ரூபா பெறுமதியான றப்பர்ப் பொருள்களை நாம் இறக்குமதி செய்தோம். இந்த 32 லட்சத்து மீதி ரூபாய்களை வீணே அந்நிய நாடுகளுக்கு அனுப்புவதை நிறுத்தி, இங்கேயே நாம் அப்பொருள்களைச் செய்ய வொண்ணாதா? என்று மேற்படி பத்திரிகை கேட்கிறது. றப்பரை இங்கேயே நாம் மிகவும் மலிவாகப் பெறலாம்; ஆகையால், அதன் பொருள்கள் மிக்க குறைந்த விலையில் செய்யப்படலாம். அரசினரும், இது விஷயத்தில் பராமுகமாயிராது, இக்கைத்தொழிலில் ஈடுபடுவோருக்கு ஏற்ற உதவிகளைச் செய்வாராக என்று அப்பத்திரிகை சாற்றிக் கூறுகிறது.

### நேருவின் சிறைத்தண்டனை.

பண்டிதர் ஜவஹர்லாலுக்கு இந்திய அரசினர் இந்தச் சந்தர்ப்பத்தில் தண்டனை விதித்ததைபிட்டுச் "சுதேசமித்திரன்" கண்டித்து எழுதுகிறது.

"பீஹாரில் ஏற்பட்ட பூகம்பத்தினால் விளைந்துள்ள சேதத்தைக் கண்ணாரக் கண்டது முதல் கஷ்டத்திற் காளானவர்களுக்கு எந்தெந்த வழிகளில் உதவி செய்யலாமென் பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து தம்மாலியன்றதை யெல்லாம் செய்துவந்த அவர்மீது இந்தச் சந்தர்ப்பத்தில் வழக்குத் தொடருவதற்கு அனுமதித்ததும் இவ்வளவு கடுந்தண்டனையை அவருக்கு விதித்ததும் தேசத்தில் எவ்வித உணர்ச்சியை உண்டு பண்ணுமென்பதை அரசினர் கவனிக்க வேண்டுகிறோம். அவர் சுயேச்சையுடனிருந்தால் பீஹாரின் புனருத்தாரணத்திற்கு மற்றெல்லாரைக் காட்டிலும் அதிக உதவி செய்யக்கூடிய விசேஷ அறிவும் ஆற்றலும் படைத்தவர். அவ்விதமிருந்தும் அவர்மீது வழக்கைத் தொடர்ந்து இவ்விதக் கடுந்தண்டனையும் அவருக்கு விதித்து விட்டதால் அவருடைய அரிய உதவியை பீஹார் இழக்க நேரிட்டுவிட்டது. புதிய அரசியலை இந்தியாவில் ஏற்படுத்துவதற்கு முன்னெக்காலத்திலுமிருந்ததைக் காட்டிலும் சவுகரியமான நிலைமை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறதென்று இந்தியா மந்திரி சொல்லிக் கொண்டிருக்கையில் தேசத்தின் நன்மதிப்புக்குப் பாத்திரமான ஒரு சிறந்த தலைவர் விஷயத்தில் இவ்வித நடவடிக்கையை எடுத்துக்கொண்டது அந்த உத்தேசம் கைகூடுவதற்கு உதவி செய்ததாகுமா வென்று நாம் அரசினரை வினவுகிறோம்" என்று அப்பத்திரிகை கேட்கிறது.

இனும்! இனும்!!

**மகாராஜ தத்துவ சாலாமிஸ்ரி லேகியம்.**

ஒரே வேளையில் ஆண்சிங்க மாவீர்கள்.

*தங்கம் வெள்ளி முத்து பவளம் அயம் காந்தம் அம்பர் கஸ்தூரி சாலாமிஸ்ரியும் இன்னும் அநேக மூலிகையும் சேர்த்து சாஸ்திர முறைப்படி செய்யப்பெற்றது.*

இதன் முக்கிய குணம்:—

*கர்ப்ப இடுப்புவலி கைகால் அசதி சூடு முதலிய மற்ற ரோகங்களனைத்தையும் சங்காரஞ் செய்யக்கூடியது இப்பூவுலகில் இந்த லேகியமொன்றே. முழுவிபரக்கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்; அவர் அவர் வியாதிக்குத் தக்கபடி ஒரு மண்டலம் அரை மண்டலம் சாப்பிடவேண்டும்.*

1 மண்டலம் சாப்பிடின் ரூ. 10 0 0. ½ மண்டலம் ரூ. 5 0 0. ¼ மண்டலம் ரூ. 2 12 0.

ஹக்கீம் V. A. றஜாக் கம்பெனி,
பறங்கிப் பேட்டை, (S. I.)

(Y. 147. 20-11-33to19-11-34.)




வந்துவிட்டன! வந்துவிட்டன!!

குறைந்தவிலை! குறைந்தவிலை!

## பெயர்பெற்ற பவுண்மார்க் ஓடுகள்.

*திறமான "பவுண்மார்க்" ஓடுகள் தற்சமையம் யாழ்ப்பாணம் ரேகில் வந்திருப்பதால் நாளதுமாசம் 19ந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஏறக்குறைய ஒருவாரம் வரையில் மேற்படி ரேகில் சகாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.*



*தேவையானவர்கள் முந்தியே ஆடர் அனுப்ப வேண்டியது.*

சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்.
யாழ்ப்பாணம்.
16-2-34.

**Phone No. 93.**

(Y. 3. 26-4-34).



காலத்துக்குத்தக்க மலிவுவிலை!

## மங்களூர் ஓட்டுக் கம்பேனி.

**மிலிற்றறி, கவர்ன்மெண்ட், முனிசிப்பல் கொந்திருத்துக்காரர்.**

மோர்க்கன் ஓடு, 1931 தொடக்கம் வருஷக் கொந்திருத்தாய் கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கப்பெற்று வருகின்றது.

*வேறு எந்த ஓட்டிலும் இல்லாத இரண்டு வரைகள் மோர்க்கன் ஓட்டில் இருக்கின்றன. இவை ஆடைமழைக்கும் ஓட்டைக் கசியவிடாது காத்துக்கொள்ளும்.*

*பத்துப் பதக்கம் பரிசுபெற்று, மற்ற எல்லா ஓட்டிலும் பார்க்க, அதிகம் இடத்தை மூடக்கூடிய எங்கள் தங்கமெடல் ஓடுகள்* **(Secretariat, State Council Chamber)** *இராசாங்கப் பெரிய கந்தோர்கள், கவுன்சில் மண்டபம் முதலிய கட்டிடங்களுக்குப் பாவிக்கப்பெற்று வருகின்றன.*

தலைகரக் கந்தோர்:—64-ம் நி-ர். ஆதிருப்பள்ளித்தெரு, கொழும்பு.

க. சே. த. சே. செல்லையாபிள்ளை.-316-ம் நி-ர். கிட்டங்கித் தெரு, யாழ்ப்பாணம்.

சோமசுந்தர முதலியார் வளவு:-வில்லூன்றி, திருக்கோணமலை.

**W. B. S.** தர்ம சூரிய:-பெட்டிக்கலவத்தை, காலி.

*பல இடங்களுக்கும்போய், எங்கள் ஓடுகளை விற்க ஏசென்றாய் சுன்னாகம் இ. தாமோதரம்பிள்ளை நியமிக்கப் பெற்றிருக்கின்றார்.*

(Y. 2. 31-3-34.)



## N. வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமான சாமான்கள்.

ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலியவிடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
**38, 3rd Cross Street, Colombo.**

**Telephone No. 30.**

(Y. 201. 8-2—7-2-35)



இன்னும் ஒருவாரத்திற்கிடையில்
இங்கு வரவிருக்கும் "கொக்ரா" என்னும் கப்பலில்

## 100000 குடைமார்க்கு ஓடுகள்

வருகின்றன,

இப்போதே ஆர்டர்கள் கொடுத்தால்,
மலிந்தவிலையிற் பெற்றுக்கொள்ளலாம்.
தற்போது உலவும் ஓடுகளில் இந்த ஓடுகளே சிறந்தன.
பிரதான அம்சங்கள்: தண்ணீர் கசியாது; தூசி அடிக்காது
தண்ணீரை உறிஞ்சாது; விசாலம் பெரிது;
100 சதுர அடி விஸ்தீரணத்திற்கு 118 ஓடுகள் போதுமானவை.
விபரங்களை உடனே பின்வருவோரிடம் அறிக.

மெசர்ஸ் செருபிம் பிறதர்ஸ்,
தனி ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Y. 12—7-5-34



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரா மூலநிதி 8 லட்சம் ரூபா.
**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 129777 00.**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.**

பங்குப்பணங் கட்டுமுறை.

*பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாங்கலாம்.*

தினசரிப் பற்றுவரவு.

*வைச்சநிதி சராசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானால் 3 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.*

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

*க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம். 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்*

உண்டியல்கள்.

*கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீறியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன*

**இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.**

கடன்.

*நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறுங் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும் (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாக் கொடுக்கலாம்.*

*காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடனெடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.*

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.
*மானேஜர்.*

(Y.143 21-11-33.—20-11-34)(தி.)


*வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.*

Printed and Published by S. Adchalingam, residing at Ayanarkovilady, Van: West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Monday 19 th February 1934.